KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஹு செப்டம்பர் மீ 3உ [No. 35.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 681
2. சிதம்பரதேவர் சரிதம்
Dr. V. S. அருணுசலம்பிள்ளை 683
3. ஊழ்வினையும் ஆள்வினையும்.
K. நாராயண ரெட்டிகாரு 686
4. ஆண்டாள்—(கல்வியும் கவித்திறமையும்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 688
5. மலர்வனம்—விதியில்லா மதிபாலன்
"மதுகரம்" 690
6. யாப்பிலக்கணம் (ஆசிரியப்பா) 692
7. கம்பராமாயணம் (தைலமாட்டு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 694
8. வர்த்தமானம். 698

கலாநிலயம்

வாசா கைங்கரியம் 2.

முன்னுரைத்தபடி வாசாகைங்கரியமாய் வாளா இழக்கப்பெறுவன வள்ளுவர் அனைய பண்டையோர் மொழிகளேயுமன்றித் தத்துவத் தறிவுசெறிந்த தற்காலத்தவர், பொய்யொடு மெய்யை மயங்காது புகன்று புகட்டும் வாய்மைகளையும் கைகடக்க விடுவதுதான் துயரம் மிகக்கலந்த வியப்பினை என்றும் விளைவிக்கின்றது. ஆந்திர சர்வகலாசாலை உதவி அதிபராயிருக்கும் புரொபஸர் S. இராதாகிருஷ்ணனை இன்று அறியாதாரில்லை. கல்வியி னகலத்தோடு அறிவின் நுண்மையும் வாய்ந்து நிரந்தரம் நிலைநிற்கவல்ல உறுதிமொழிகளைத் தேர்ந்தெடுத் தியம்பும் ஆற்றலில் உலகடங்கலும் இவருக்கு இணையாவார் மிகச்சிலர் என்னும் புகழ் செவ்வியின் உரிமையாய பெரியவர் இவர். எத்தேயத்தினர்க்கும் எவ்வகையினும் இவர் பின்னிடைந்தவரலர் என்னும் பெருமையை, அரசியல்வாதம் முதலியவைகளை முன்னிட்டுப் பேசவரும் இந்தியர்கள்எல்லோரும், நம்முடைய தற்காலச் சிறப்பிற்குச் சான்றுகப்பகரப்புகும் சிற்சிலரில் முன்வைக்கப்பெறுகின்ற பெயர் இவரது. இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு ஒருங்கு திரண்டெழுந்து எல்லோரும் செல்வர். ஆயினும் இவருடைய புகழைப் பேசிப் பாராட்டுவதெல்லாம் மனமும் செய்கையும் பற்று வாய்ப்பேச்சாகவே உதிர்ந்துவிடுகின்றது. இதற்குயாம் வருந்துகின்றேம். அதுவுமன்றி அவ்வாறு கழிகின்றதே என்பதும் மாந்தருக்குத் தெரியாமற்போவது ஏன் எனும் வியப்பும் அதிகம் உளது.

சென்றவாரம் புரொபஸர் எஸ்.இராதாகிருஷ்ணன் ஹைதராபாத்தில் கலாசாலை மாணவர்க்கு நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் பின்வரும் உறுதியொன்று எடுத்துக் கூறினர்:—

"If you ask me what it is that we require most urgently to-day in our national life I would reply that it is *Culture*. What is Culture? Why are you in a college? Culture is what remains with you as a precious gift when you foget what you have learnt in the college. It is not the varied information you learn or intellectual skill or intellectual accomplishment. Culture may be defined as hospitality of the mind, a new dimension of the mind. If a college did not help in to bring about this result, the education imparted by that college may be said to be a failure. It is necessary to pay adequate attention to science and technology, but I think, they cannot be reproduced in your culture. What after all is the difference between ourselves and ancient savages. Intellectually we are cleaverer but have we solved the mystries of human existence. Our nature has not improved, our impulses not better controlled. Hence arises the need to emphasise, along with technological education, the importance of culture, religion and philosophy.

[நம் இந்திய வாழ்க்கையில் மிகவும் அவசியமாய் விரைந்து வேண்டப்படுவது யாதென்று என்னை வினவுவீராயின், அது கல்சரே எனப் பதிலுரைப்பேன். கல்சர்என்பதுயாது? நீங்கள் ஏன் கலாசாலையில் படிக்கின்றீர்கள். நீங்கள் இக்கலாசாலையில் கற்றவைகள் அனைத்தையும் மறந்தபின்பு உங்கள் வாழ்நாள் முழுவதற்கு முரியதோர் விலையிலா வெகுமதியாய் எஞ்சிநிற்கு மதுவே கல்சராகும். இங்கு நீங்கள் படிக்கின்ற பல்வேறு விடயங்கள் அல்லது கல்சர். கருவிநூல்

திறமையும் கல்சர் அன்று. புத்தியின் நலங்களு மன்று. மனத்தின் வண்மையே கல்சரெனலாம். அது மனப்பரப்பிற்கு அமையவரும் புதியதோர் பேரெல்லை. இந்தப் பயன் எய்துதற்குக் கலாசாலை உதவாதாயின் அக்கலாசாலை கற்பித்த கல்வியெல்லாம் வீணுயிற் றென்னல் வேண்டும். பூதசாஸ்திரங்களுக்கும், கருவிநூல்களுக்கும் கலாசாலைகளில் தக்க இடம் இருக்கவேண்டுவது அவசியமே. ஆயினும் இவைஉங்கள் கல்சரோடு கலந்து தோன்ரு. பார்க்குமிடத்து, நமக்கும் பண்டைய காட்டுமிராண்டிகளுக்கும் யாதோ வேறுபாடு? புத்தியினளவில் நாம் அதிக சாமர்த்தியசாலிகளாயிருக்கலாம். ஆயின் என்! மானுடவாழ்க்கையின் இரகசியங்களைத் தெளிந்தவராயினேமோ! நம்முடைய இயற்கையோ உயரவில்லை. நம்முடைய விருப்பு வெறுப்புக்களும் ஆசாபாசங்களும் அக்காட்டுமிராண்டிகளினும் செம்மையாய் அடக்கி ஆளப்பெறவு மில்லையே. ஆதலாற்ருன் கருவிநூல் பயிற்சியோடு, கல்சர் சமயநெறி தத்துவசாத்திரம் ஆகியவைகளின் அவசியத்தை அதிகமும் இன்று வற்புறுத்த வேண்டி வருகின்றது]

இப்படி நமக்கு யாதினும் மிகவிரைந்து வேண்டப்படுவது கல்சரே என்று இவ்வறிஞர் கூறுகின்ற தூய வாய்மையைச் சனங்கள் கடைபிடிப்பாராயின் வேறு வேண்டற்பாலது யாதுமில்லை. ஒன்று, சிறிதுமறிவிலாதவர் என்று இவரை இகழ்ந்து அகற்ற வேண்டும். அல்லது, பொய்யில் கேள்விப் புலமையினேர் இவர் என்று நினைப்பதும் சொல்வதும் உண்மையாயின், அவருடைய தூயமொழிகளை வழிபட்டு ஒழுகவேண்டும். மற்று, அவரது கல்வி அறிவு மேன்மைகளைச் சிறிதும் அயிர்த்தலின்றித் தம் நாப்போமளவும் புகழ்ந்துகொண்டு, நமக்கு வேண்டியன இவ்விந்த உரிமைகளென்றும், ஆட்சிமுறைகள் இவையிவையென்றும் பொருளாதாய வழிகள் இவையிவையென்றும்,உணவு முதல் மணம் ஈருகச் சீர்திருத்தங்கள் இவையிவையென்றுங் கோட்டிகொண்டு கழறித்திரிதல் மதியுடைச் செய்கையாமென்று எண்ணவோ சற்றேனும் எம்மால் இயலவில்லை. முதற்ருெடங்கி இக் கலாநிலயம் வற்புறுத்தி வருவது கல்சரையே. முன் 1929-ம் வருடத்திய பின்ஞறு மாதத்து 25 தலைபங்கங்களில் கல்சரின் அவசியத்தைப் பற்றியும், கல்சருக்கும் கவிதைக்குமுள்ள தொடர்பைப் பற்றியும், சுயகல்சரின் இயல்பைப் பற்றியும், கல்சரை அடையும் வகைகளைப் பற்றியும் அவ்வவைகளுக்குரிய விரிவினேடு வரைந்திருக்கின்ருேம். இப்பொழுது ஸ்ரீமான் S. இராதாகிருஷ்ணன் உரைக்குமிது அங்கு நாம் நிறுவியகொள்கைகளோடு இணங்கியிருத்தலைக் காணலாம். இக் கலாநிலயத்துடன் ஒக்க நினைக்கும் உறவுடைய பெருமக்களில் இவரொருவர். இரண்டு ஆண்டுகளுக்குமுன் யாம் வரைந்த சில வாசகங்கள் இன்று இவர் உரைத்தவைகளோடு ஒப்புநோக்குதற் குரியன.—

"......கல்சர் உடையவர்களே வாஸ்தவமான சுதந்தரத்தையும் சமத்துவத்தையும் போதிக்கவல்லவர். கல்சருடைய பெரியோர் நிரந்தரமான நூல்களின் கல்வியைச் சனங்களினிடையே கொண்டுபோய் உலாவரச் செய்து அரியணையமர்த்தி முடிசூட்டவேண்டுமெனும் ஆர்வமுடையவராவார். ஆள்வது கல்வியாயின் குடியனைத்தும் ஒருபடித்தாம். கலைகளின்முன் எவர்பெரியர் எவர் சிறியர்;எவர் வலியவர்,எவர் எளியவர்; எவர்உடையவர், எவர் வறியவர்; பொதுஜனங்களுக்குத் தலைவர்களாயிருக்கமாட்டார் கல்சருடையோர். ஏனெனில் அப்பொதுஜனங்களின் கால்களைப் பி[illegible]க்கே 'தலைவர்' என்னும் பேர் தரித்திருக்கக் காண்கின்ருேம். காலைப்பிடித்துக் கொள்வதெல்லாம் அந்தரம்நோக்கில் அவ் வோட்டுப்பெட்டி இருக்குமிடம் இழுத்துப்போய்ப் பழிப்பவரைப் பழித்தும் இச்சகம்பாடுமிடத்திற் பாடியும் ஒவ்வோர்சமயம் அடிப்பவரை அடித்தும், சில சாதித்து வைப்பதற்குப் பதிலாய்க் கல்சருடைய அப்பெரியவர், பொதுஜனங்களுக்கு நண்பர்களாகவேயிருந்து இனிமையின்பால் ஒளியின்பால் அவர்களைக் கைகோத்து அளவளாவி அழைத்துச் செல்வார். பொதுஜனங்களுக்குத் தாம் ஒன்றும் பிரசாரம் செய்யார்; அவர்களைத் தெய்வமாக் கவிகளுடன் பேசவைப்பார். சங்கங்கள் கூட்டிவையார், ஆனல் சகோதரர்கள் ஆக்கிவைப்பார். கடவுளைப் பழிக்கமாட்டார், காக்கவுமாட்டார்; கடவுள்நெறி இன்னதென்று அவரவர் தாமே கண்டுணருமாறு கருத்தைத் திருத்துதற்கியன்ற கலைகளின்பால் கவர்ந்து கொள்வார். இத்தகைய களவியல் கல்சருக்கே யுளது. இதனினும் அவசியமானது இந்நாள் வேறென்று உளதோ விளம்புவீர்."

கலைகளின்வளம் மிகமிக உலகத்தின் வள்ளல்மனம் பெருகிப்பெருகி நாளுக்குநாள் புதியபுதிய எல்லைகள் நிறுவும்படி பரவுவதாகும்.பொதுஜனமனத்தின்எல்லையல்லால் நாட்டிற்கு வேருேர் எல்லையில்லை. மற்றுஅரசுமுறையில் அடங்குதற்கு அமைகின்ற எல்லைகளெல்லாம் பொருளற்றவை. இவை மாறும்; அவ்வாறுமாறுதற்குப் பகையும் பழியும்கொலையும் எளியோர்நலிவும் வலியோர்கொடுமையும் மிகவேண்டும். கல்சரோ யாருடனும் பகைகொள்வதில்லை; அதனுல்போர் ஒடுங்குகின்றதேயன்றி அதன் பேரோ ஒருபோதும் ஒடுங்காது. பகையுடன் ஏந்திவந்த இரும்பையுங் கரும்பாக்கும் இரசவாதம் இதன்பாலுளது.தித்தித்த சொல்லல்லால் பேசும்நா அதற்கில்லை. கடவுளிற் குறைந்ததோர் காட்சியைக் காண அதற்குக் கண்ணுமில்லை; காட்டுதற்கு விரலுமில்லை. வைவாரைக்கல்சர் இகழாது; புகழ்வாரை மகிழவும் மகிழாது. இக்கருத்துக்களை ஸ்ரீமான், இராதாகிருஷ்ணன், மனத்தின் வண்மையென்றும், புதிய எல்லைகளென்றும் சீரிய கூரிய சொற்களால் இனிது விளம்பினர்.அவரது அருமையைத் தெரிந்துகொண்டதாய்ப் பலபடி புகழ்ந்துபாராட்டும்நம்நாடு, அவர் உரைக்குஞ்சொற்கள், தாடகைமீதெய்த இராமபாணம்போல் கடிதின்கழன்று அப்புறம் போகாமல், இறையேனும் நெஞ்சிற் றங்கும்வண்ணம் நிகழ்வதன்ருேகடன். இக்கருத்து யாதுமின்றிப் பெரியோர் பெருமையைவேறுவேறு நோக்கங்களோடு விளம்பிக்கொண்டிருக்குமிப் பயனில்மொழிகளைத்தான் யாமிங்குவாசாகைங்கரியமென வழங்கினேமென்பது இதனல் வெளிப்படை. இவ்வகையான பற்பல மெய்யுரைகளை வாயளவில் வழுத்துவதோடு கைவிட்டுவிடுகின்ற இப்பழக்கம் மிகக் கொடிது. வறிஞருக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் பெயரால் நிகழ்கின்ற மாற்றங்கள் பற்பல இவ்வாறே முடிந்துவிடக் காண்கின்ருேம். அமைதியென்ற பெயரால் முழங்கி எழுகின்ற ஆரவாரங்களுக்கு அளவில்லை. பொய்க்கெல்லாம் புகலிடமாயிற்று மெய்யென்னும் அச் சொல். விடுதலை என்றபோல் உலகடங்கலும் இடுகின்ற விலங்கோ ஆழ ஆழப் புதைந்து இறுகுகின்றது. ஆய்ந்துகொள்ளும் நுண்ணறிவில்லா மக்கள் வாயில் மென்றிருக்கச் சில சொற்களைத் திணித்தலினுந் தீமை வேறில்லை.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008

சிதம்பரதேவர் சரிதம்.

[666-வது பக்கத் தொடர்ச்சி]

5. இரண்டு சகோதரர்கள்.

பரமார்த்தகேசரி :—வாராய் தம்பி புஜங்ககேசரி! நமது தந்தை மந்திரியிடஞ் சொல்லியனுப்பிய செய்திகளைக் கேட்டுக்கொண்டிருந்தாயே, நீ என்ன நினைக்கின்ருய் ?

புஜங்ககேசரி :— அண்ணு, தங்கள் நினைவே என் நினைவு. அறிவுதெறிந்த நாள்முதல், தாங்கள் நடந்துகொண்டு வருகிற நடவடிக்கைகளுக்கு அனுசரணையாகவே நான் எப்போதும் நடந்திருக்க, இப்போது, "உன் நினைவு யாது' என்று பிரித்துக் கூறலாமா ?

பரமார்த்தகேசரி :—ஆஹா! அதற்கென்ன சந்தேகம்! நாமிருவரும் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடன் நடந்துவருவது உலக சம்மதம். நமது தந்தை அது தெரிந்தே, நமக்கு இத்தகைய நற்செய்தி சொல்லியனுப்பி இருக்கிருர். ஆகையால் உன் உத்தேசமிவ் விஷயத்தில் தெரிந்துகொண்டு இதற்கு வேண்டிய முயற்சி தேடவேண்டுமென்பது என் கருத்து.

புஜங்ககேசரி :— "அண்ணு, தங்களெண்ணத்திற்கு நானெப்போதும் மாறுபாடாய் நடவேன். மேலும் நமது தாயார், பிராணுந்த காலத்தில் நம்மிருவரையும் அழைத்துச் சொன்னதை மறந்துவிட்டீர்களா ? எனக்குத் தாயின் கடைசி உபதேசம், இப்போதுதான் உபதேசித்தது போலிருக்கிறது. அதாவது, "அப்பா புஜங்கா! நீ உன் தமயனை எக்காலத்திலும் இரவிலும் பகலிலும் யுத்தகளத்திலும், இராஜாங்கத்திலும் நன்மையிலும் தீமையிலும், திரிகரணசுத்தியாய் உன்னிஷ்ட தெய்வத்திற்கும்,தந்தைக்குஞ் சமமாக எண்ணிக்கொண்டு அவன் கட்டளைகளைச் சிரசால் வகித்துக் எள்ளளவும் பிறழாமல் நடந்துகொண்டு அவனை உன் பிராணனைக் காப்பதுபோல் பாதுகாத்துவரவேண்டும்.அப்படிச்செய்கிறேனென்று எனக்கு நம்பிக்கை செய்துகொடு" என்ருர். நானும் அப்படியே செய்து கொடுத்து அதற்கு யாதொரு குறைவும் வராமல் நடந்துவருகின்றேன். இனியும் என் பிராணன் உள்ளவரையிலும் அப்படி நடக்க யான் கடைமைபூண்டிருக்கிறேன். ஆகையால் தங்கள் மனதி லெண்ணியிருக்குஞ் சங்கதிகளை வெளியிட வேண்டும்.

பரமார்த்தகேசரி :— ஆஹா, என் துணைவா! தாயின் வார்த்தை எனக்கும் ஞாபகமிருக்கின்றது. "புஜங்கன், உன்னுடன் பிறந்த தம்பியல்லவா; நீ அவனை உன்னுடலில் ஒரு அம்சமாக எண்ணி யாதொரு வேறுபாடு மில்லாது பாதுகாத்து வரவேண்டும். அப்படி வாக்குக்கொடு" என்ருர். நானும் கேட்டு முன்வாக்களித்து நடந்துகொண்டுவருகின்றேன். இப்பொழுது நானெண்ணியது யாதெனில், நாமிருவரும் மாறுவேடம் பூண்டு பாலைவனஞ்சென்று குலசேகரப் பெருமாள் சக்கரவர்த்தியின் இரண்டு குமாரத்திகளையும் கண்டு அவர்கள் நடத்தையைச் சோதித்துவர உனக்குஞ் சம்மதமோ ?

"அந்தச் சக்கரவர்த்திக்கு அழகியபுதல்விகள் இருவர் உண்டு. அவர் மிக்க சாமர்த்திய முடையவர்கள். அவர்களிருவரும் உங்களைப் போலவே சிறுவயதினின்று பேதமின்றி அன்யோன்யமாக மனமொத்து வாழ்ந்து வருகின்ருர். அவர்களைவிட உங்களுக்குத் தகுந்த மங்கையர்கள் வேறெங்கு மில்லை. அவர்களைக் கடவுள் உங்களிருவருக்கென்றே சிருஷ்டித்திருப்பது போலிருக்கிறது. அவ்வரசன் சக்கரவர்த்தியாயினும் சற்குண சற்சங்க முள்ளவரென்றும் கேள்விப்பட்டேன். அவரிடம் பெண்பேசுவதற்காகப் பரிவாரங்களை அனுப்புவதைவிட நீவி ரிருவரும் முன் சென்று அப்பெண்களைப் பார்த்து அவர்கள் குணுதிசயங்களுக்கும் உங்கள் மனோபாவங்களுக்கும் நேர்படுமோ வென்று தெரிந்தபின், தக்க முயற்சி செய்ய வேண்டுமென்பது உம் தந்தையின் இச்சையாகையால் காலதாமத மின்றி நீவிர் இக்காரியத்திற்கு முயலவேண்டும்", என்று மந்திரி சொன்னர். இனி உன் கருத்தென்ன ? அதைச் சற்று வெளியிட்டு ஆகவேண்டிய காரியங்களை முயலவேண்டும்.

புஜங்ககேசரி: — அண்ணு, தங்களிஷ்டப்படி பிரயாணப்படுவதற்கு யான் சித்தமாயிருக்கின்றேன். உத்தரவை எதிர்பார்க்கிறேன். தந்தையின் கருத்து மிகவும் உத்தமமாயிருக்கிறது. நமக்குத் தாயுஞ் சகோதரிகளு மில்லாததால் நாமே போய்ப் பார்த்து மனதைத் திருப்தி செய்யவேண்டு மென்று யோசித்திருக்கிருர். மிகவும் நன்மை. எப்போது பிரயாணப்பட உத்தேசமோ அதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

பரமார்த்தகேசரி:—தம்பி! இன்றையதினம் இரவில் ஒருவருக்கும் தெரியாமல் நாமிருவரும் இந்தப் பட்டணத்தை விட்டகன்று மாறுவேடம்பூண்டுவிரைந்து வெளிப்பட வேண்டும். அதற்கு வேண்டியவைகளைக் கூடிய சீக்கிரத்தில் சேகரம் பண்ணுவாய். நான் நமதிஷ்டதெய்வமான ருத்திரமூர்த்தியைப் பிரார்த்திக்கப் போகின்றேன்," என்று சொல்லிப் பரமார்த்தகேசரி புஜங்ககேசரியை விட்டுப்பிரிந்தான். புஜங்ககேசரி, இருவருக்கு மிரண்டு குலமுங்குணமுமமைந்தபஞ்சகல்யாணிக் குதிரைகளையும் வேண்டிய திரவியங்களையும், வஸ்திராபரணங்களையும் அப்போதைக்கப்போது வேஷமாற்றிக்கொள்வதற்காக வேண்டிய வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டுஇரவு நெருங்கவே தமையனிடம் வந்து அவருத்திரவை எதிர்பார்த்திருந்தான்.

பரமார்த்தகேசரி தம்பியுடன் சென்று அமுதருந்திக் கடவுளைத் துதித்து, வெளிப்பட்டுப் புரவிகளிலேறி மனோவேகவாயுவேகமாகக் குதிரைகளை நடத்தி மறுநாள் சூரியோதயத்தில் எல்லையைத் தாண்டி ஓர் தாமரைத்தடாகத்திற்குச் சென்று நித்திய கடனை முடித்துத் தாங்கள் கொண்டுவந்த உணவை யருந்திக் குதிரைகளுக்கும் உணவளித்து உபசாரணை செய்து, ஓர் வடவிருக்ஷத்தி னிழலிற் குதிரைகளைக் கட்டித் தாங்களும் அயர்ந்து நித்திரை போயினர்.

நித்திரை நீங்கியெழுந்து, பகல் பத்துநாழிகை யிருப்பதை யுணர்ந்து அங்கு நிழலுக்காக வந்திருக்கும் பிரயாணிகளிடஞ் சம்பாஷித்து அவர்களாற்பாலைவனத்தெல்லை இன்னும் முப்பது காத மிருக்கின்றதென்றும் போகும்வழியில் பட்டணங்களும் கிராமங்களும்

இருக்கின்றன வென்றும் தெரிந்து, தமது அசுவங்களி லாரோகணித்து அந்தப் பிரயாணிகள் சுட்டிக் காண்பித்த மார்க்கமாய் மேற்றிசைநோக்கி மெதுவாக யாத்திரைசெய்தார்.

குதிரைகளை மெதுவாக நடத்திக்கொண்டு போனதால் காதவழி செல்லுமுன் இருள் நெருங்கிவிட்டது. வழிக்கு அருகாமையிலிருக்கும் ஒரு கிராமத்தில் ஓர் ஒளவையின் வீட்டிலிறங்கித் திரவியமளித்துப் போஜனமருந்திக் குதிரைகளுக்கும் உணவளித்துச் சற்று இளைப்பாறி இரவிலேயே பிரயாணப்பட்டு அதிவேகமாய் யாத்திரை செய்தனர். இப்படிப் பகலிலெல்லாம் ஒவ்வோர் சிறிய கிராமங்களில் தங்கியிருந்து இரவில் அதி துரிதமாய் யாத்திரை செய்து ஏறக்குறைய ஒருவாரத்திற்குள் குலசேகரப்பெருமாள் நாட்டின் எல்லையைச் சேர்ந்தார்கள். இரவில் யாத்திரை செய்வதால் தங்கள் புரவிகளுக்கு வழிவருத்தமில்லையென்பதும் பட்டணங்களின் வழியாய்ப் போகவேண்டி யிருப்பதால் தாங்கள் இன்னுரென்று யாருக்குந் தெரியாமலிருக்க வேண்டுமென்பதும் அவர்கள் கருத்து. பாலேவன எல்லைக்குட் சென்றவுடன் தங்களுருமாறி இரண்டு வியாபாரிகளின் உடைகள் பூண்டு குதிரைகளை விற்பவர்கள்போல் சென்றனர்.

இவர்கள் வேடம் மாறியதையும் முன்னிருந்த இராஜவடிவுகளையுங் கண்ட விதூஷணன் என்ற இரகஸ்ய சேவகத் தலைவன் பிச்சைக்காரனைப்போல் வேடம் பூண்டு அவர்களையடுத்து, "தேகீ" என்றான். புஜங்கன் அவனுக்கு ஓர் வராஹனளித்துப் "பாலேவனம் இனி எவ்வளவு தூரமிருக்கிறது? எங்கள் புரவிகளை அவ்விடம் வாங்குபவர்களுண்டோ?" எனப் "பாலேவனம் பதின்காத தூரம்; அவ்விடத்திற் புரவிகளை வாங்குபவர் அனேகருண்டு," என்று மறுமொழி புகன்று, அவர்களுக்கு வந்தனமளித்துத் திரும்பித் தன் இருப்பிடம் சேர்ந்து ஒரு சீட்டெழுதி அதில் புஜங்கன் கொடுத்த வராஹனையும் வைத்துத் தன் சேவகனி லொருவனை யழைத்து, "ஓ மகரகுண்டலா, நீ இச்சீட்டை மிகச் சாக்கிரதையுடன் உன்னுலான வேகத்திற் சென்று மகாப்பிரபு விக்ரமசேன முதன் மந்திரியிடம் சேர்த்துவிடு" என்று, மற்றொருவனை யழைத்து, "ஓ மார்ஜ்ஜிக பாதா! நீ இதோ போகும் இரண்டு பாட்டைசாரிகளைத் தொடர்ந்து அவர்களுக்குச் சிறிதும் தெரியாமல் அவர்கள் செய்கைகள் யாவற்றையும் எனக்குத் தெரிவித்துக்கொண்டிரு; உன்னுடன் இரண்டு சேவகர்களையும் அழைத்துப்போ," என்று, பிறகு வேறிரண்டு சேவகர்களை விளித்து, "நீங்கள் இந்த க்ஷணமே உங்கள் புரவிகளிலேறிக் கொண்டு அதிவேகமாய்ச் சென்று இதோபோகும் இரண்டு மனிதர்களும் எந்த ஊரிலிருந்து வருகிறார்கள் என்றும் அவர்கள் விருத்தாந்த மென்னவென்றும் கூடியசீக்கிரத்தில் தெரிந்து வரவேண்டும்" என்று கூறி, அவர்களுக்கு இராஜகுமாரர்கள் வந்தவழியைக் காண்பித்துக் கீழ்த்திசைக் கனுப்பிவிட்டு நடக்கும் அதிசயங்களை யெதிர்பார்த்திருந்தான்.

கீழ்த்திசை போனவர்களிருவரும் குதிரைகளை யதிதுரிதமாய் நடத்தி இராஜகுமாரகளேறிவந்த குதிரைகளின் அடிகளைக் கவனித்துச் சென்று அவர்களிறங்கின இடத்தில் தாங்களுமிறங்கிக் களைப்பாறிப் பிறகு ஓடிப் பத்துநாளில் அவர்கள் பட்டணஞ் சென்று இரண்டொருநாள் அங்கிருந்து திரும்பித் தங்கள் தலைவனிருக்குந் திக்குநோக்கிப் பிரயாணப்பட்டார்.

இராஜகுமாரர்களைத் தொடர்ந்து போனவர்கள் பிச்சைக்கார வேஷத்துடன், இராஜ குமாரர்களுக்குப் புலப்படாமல் அவர்கள் பின்னேசென்று, செய்கைகள் யாவற்றையுந் தெரிந்து அவர்கள் பாலேவனம் போனவுடன் விக்ரமசேனனுக்கு அவர்கள் வரவைத் தெரிவித்துத் தம் மிருப்பிடஞ்சென்றனர்.

இராஜகுமாரர்களோவெனில் தாங்கள் பாலக்காடு சென்று அரசவீதி வியாபாரவீதி முதலியஜனநெருக்குடைய இடங்களை அகற்றி ஊர்க்கருகில் நதிக்கரையில் இருக்கும் ஓர்சிறுகிராமத்திற் சென்று அங்கொரு சிறிய கிரகந்தை வாடகைக்கமர்த்தி அதிரகஸ்யமாய் நாள்கழித்து வந்தார்கள்.

---

6. காதல்.

இராஜகுமாரத்திகள் ஒருநாள் வசந்தகாலத்திற் பூர்ண சந்திரோதய மாவதைப் பார்த்து உப்பரிகையினின்று வெளிப்பட்டுத் தங்கள் தோழியாகிய மரகதத்தை யழைத்துக்கொண்டு நந்தனவனஞ் சென்று சண்பகம் முல்லை சம்பங்கி மலர்கள் மலர்ந்து நிறைந்த பூந்தோட்டத்தி லமைத்திருக்கும் புஷ்பபஞ்சணையில் சயனித்துக்கொண்டு பூர்ணசந்திரனைப் பார்த்துத் திகைத்து ஒருவர்க் கொருவர் தாங்கள் மனதில் நெடுநாளாய் வைத்திருக்கும் இரகசியங்களைச் சொல்லி யாற்றிக்கொள்வாராயினர்.

காந்திமதி :— கண்ணே, சந்திரலேகை! உன் மனதில் இப்போதுதோற்றுவதை ஒளியாமற்சொல் பார்ப்போம்.

சந்திரலேகை :— தமக்கையே, தங்கள் மனத்தில் என்ன நிகழ்கின்றதோ அதுவேதவிர எனக்கு வேருக யாதொன்றும் தோன்றவில்லை.

காந்திமதி:—அடிகண்ணே! நானெப்போது எதைக் குறித்துக் கேட்பினும் நீ அப்படியே பதிற் சொல்கின்றாய், இது சரியா? நாமிருவரு மிருக்கும் ஒற்றுமைக்கும் நட்புக்கும் அழகா? உன் எண்ணத்தை ஒளியாமற் சொல்லலாகாதா? நானென்ன தீங்குநினைப்பேனு?

சந்திரலேகை:—அக்காள்! அப்படிப் பேசலாகாது. உங்களைவிட எனக்கு உயிர்த்தோழி வேறில்லை; இனி உண்டாவது மில்லை. உங்கள் எண்ணத்திற்கு மாருக என்னெண்ணம் ஒருபோது மிராது. "நாய்சென்றால் வாலுங் கூடவேதானே செல்லும்: நாம் பிரியாமல் இருக்க என் இஷ்டதெய்வமாகிய காமாட்சியம்மனை எப்பொழுதும் பிரார்த்தித்து வருகிறேன். ஆகையால் தாங்கள் என்ன எண்ணக்கூடுமோ அதுவே நானும் எண்ணுவதா யிருப்பதால் இனியாவது என்னைப் பிரித்துப்பேசாமல் தங்கள் ஆக்கினையைத் தெரிவிக்க வேண்டும்.

காந்திமதி:—ஆஹா என் கண்ணே! நாமிருவரும் இப்படியேதான் நாட்கழிக்க வேண்டுமா? உலகபோகங்களை மறந்து எத்தனைநாள் வீண்காலங் கழிப்பது? நாம் மங்கைப்பருவமடைந்து நாலைந்து வருடங்களாகின்றனவே. நமது விவாகத்தைக் குறித்து நமது தாய் தந்தையர்கள் ஒன்றும் யோசியாம லிருக்கிறார்களே! இந்த வசந்தகாலச் சந்திரனைப் பார்! இவன் தனது சாந்தமான கிரணங்களை மார்பினுள் துளைக்கச்செய்து

என் தேகத்தைச் சுடுகின்றான். அக் கிரணங்கள்எவ்வளவுக் கெவ்வளவு சாந்தமோ அவ்வளவுக் கவ்வளவு வெப்பம் என் தேகத்தில் உண்டாகிறது. நமதிஷ்டத்திற்கிசைந்த இரண்டு உத்தம புருடர்களை ஓரேகாலத்தில் வாய்க்கப் பெறுவதும் அரிதே! நாமோ ஒருவரைவிட்டொருவர் பிரிந்திருக்கவும் இயலாதே! இந்த இக்கட்டு எப்படித்தீர்வது, என்று பலவாருக என் மனம் புண்ணுகின்றது. இப்படியே உன் மனதிலு முதிக்கின்றதோ?

சந்திரலேகை:-என்னுயிர்க் குயிராகிய சகோதரியே! தங்கள் மனம்போலவே என் மனமும் இன்று மாலை சந்திரோதயம்முதல் வருந்திக்கொண்டே இருக்கின்றது. பெண்க ளெவ்வளவு கற்றாலுங் காதலைக் கடக்கக் கற்றலரிது. காதலே மாதர் நட்பு. புருஷனைப் பேணுவதும், பிள்ளையை வளர்ப்பதும், கற்பைக் காப்பதும், கடவுளைத் துதிப்பதும், கல்வியைக் கற்பதும், போர் புரிந்தாடுவதும், பூமியை யாள்வதும், பொன்னணி பூண்வதும், புகழ்பெற்று வாழ்வதும், பெண்களுக்குக் காதலே யன்றோ? ஆனால் அக்காதல் நேரான மார்க்கத்தி லிருக்கவேண்டிய தொன்றே நம் பூஜா பலன். ஆகையால், அப்படி நன்மையையும் ஒற்றுமையையும் தரும்படி நாம் அக்காதலை வசப்படுத்த வேண்டிய மனேதிடம் பெற்று உறுதிப்படும்படி யான் அனுதினமும் என் இஷ்ட தேவதையைப் பிரார்த்தித்து வருகிறேன். தாங்கள் கொண்ட காதல் நியாயமேயன்றி வேறென்ன! இவ் வசந்தகாலத்துச் சந்திரன் அக் காதலைச் சுலபமாய்க் கிளப்பிவிட்டு மதனனைக்கொண்டுதன் பஞ்சபாணத்தால் ஓயாமல் அடிக்கச்செய்து நம் இருவரையும் வருத்துவதும் நிஜமே. இதற்கு நாமென்ன செய்யலாம்? என் தேகம் தங்கள் தேகத்தைவிடக் கொதிப்புண்டு ஆற்றுதவெம்மையை யடைந்திருக்கிறது. நாமிருவரும் எப்படி யிருக்கிறேமோ அப்படியே இரண்டு சகோதரர்கள் ஒரு பிதாவின் குமாரர்களாய், எல்லா நன்மைகளு முடையவர்களாய் வாய்ப்பது கடவுள் கிருபையாலன்றி மனிதர்களின் பிரயத்தனத்தால் ஆவதன்று. இது தெரிந்தே நமது தாய் தந்தையர்கள் நமது விஷயத்தில் மௌனமாய் இருக்கிறார்போல் தோன்றுகின்றது. என்ன செய்யலாம். பெண்ணைப் பிறப்பித்த பிரமன் நம்மைப் பிள்ளைகளாகச் சிருஷ்டித்திருந்தால் இவ்விதம் கவலைப்பட நேரிடாதே! ஓ தெய்வமே!"

இவ்விதம் இருவரும் வியாகுலப்படக்கண்ட மரகதம் பயந்து, "அம்மணி! இரவு பன்னிருநாழிகையாய் விட்டது. இனி இங்கிருப்பது நேரன்று. அரண்மனையை யடைவோம். நித்திரையின்றி இருப்பதால் தேகங் குலையும். எழுந்திருக்கப் பிரார்த்திக்கின்றேன்" என்றாள். அப்பொழுது அவ்விருவரு மெழுந்து தாங்கள் தங்களை மறந்து விகாரிகளாய்ப் போனுரே யென்று நாணித்!தாதியை நோக்கிக் காந்திமதி, "அடி மரகதம்! நாங்களெங்கள் குறைகளைச் சொல்லி யழுதுகொண்டிருந்தோமே! நீ எல்லாந் தெரிந்தவள்; உன் கருத்தென்ன' வென்றாள்.

மரகதம்:—அம்மணீ! உள்ளபடி முடியும். பெண்ணைப் பிறப்பித்த பிரமன் மணமகனை முன்னமே பிறப்பித்திருப்பான். இரவின்றிப் பகலும், வெண்மையின்றிக் கருப்பும், ஆணின்றிப் பெண்ணும் உலகத்திலில்லை. ஆகையால், மனந்தேறி அரண்மனையைச் சேர்ந்து பள்ளியறை செல்வோம் வாருங்கள்" என்றிருவரையு மழைக்க, இராஜபுத்ரிகள் ஒருவர்க் கொருவர் ஆற்றித்தேறிப் பள்ளியறைசென்று அம்சதூளிகாமஞ்சத்தில் படுத்து மெய்மறந்து நித்திரைபோயினர்.

மறுநாள் உதயத்தில் இந்திரசேனை எழுந்து, "விடியற் சாமத்தில் நித்திரை நீங்கி ஸ்நானஞ் செய்து தேவதா பூஜை முடித்து, சூர்யோதயத்தில் என் கால் வருடி என்னை எழுப்புவது வழக்கமாதலால் சூர்யோதயமாகியும் என் குமாரத்திகள் தரிசனந்தரவில்லையே யாது காரணம்?" என்று தன் பள்ளியறையை விட்டுத் தன் குமாரத்திகள் நித்திரைசெய்யும் பஞ்சணைக்குச் சென்று பார்க்க, அங்கிருவரும் நித்திரையில் சொப்பனுவஸ்தையில் விகாரமுற்றுத் தேகங் குலைந்திருப்பதைக் கண்டு, திடுக்கிட்டு ஏதோ காலவித்தியாச மென்று பயந்து, மரகதத்தை யழைத்து நடந்த வரலாற்றைத் தெரிந்து, இனி யிவர்களுக்கு விவாக முடிக்கவேண்டுமென்று, தன்தங்கை சுமதி மாதையழைத்து நடந்ததையுரைத்து, "நமது குமாரத்திகளுக்குவிவாகம் முடிக்கவேண்டும். நம் பிராணநாயகரிடம் இவர்கள் வியாகுலத்தைச் சொல்லி விவாகத்திற்கு முயற்சி செய்யவேண்டும், இல்லையேல் நமது இராஜாங்கத்திற்குக் கெடுதி நேரிடும்; காதலால் வருந்தும் கன்னிகைகளை மணமின்றி வைத்திருத்தல் சிறைவைத்திருப்பதற் கொக்கும். அவர் தம் மனக்குறையால் தீங்கு நேரிடும்; இதுவரையிலிவர்கள் எண்ணத்தை அறிரியாமற் போயினேமே," என்றாள். சுமதி மாது தன் மக்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, தேகங் குன்றிவிடுமே என்று வருந்தி, இந்திரசேனையுடன் இராஜசன்னிதிக்குப் போய் அவருக்குபசரணைகள் செய்து நித்திரைநின்று நீங்கக் காத்திருந்தாள்.

மரகதமோ வெனில், இராஜபுத்திரிகளைச் சைகையாலெழுப்பிப் பள்ளியறையை விட்டகற்றி நித்திய கடனை முடிக்கச்செய்து தேவதா பூஜைக்குச் செல்ல நினைப்பூட்டினுள்.

அரசன் நித்திரைநீங்கிப் பத்தினிகளுடன் வழக்கப்படி அளவளாவி நித்தியகடனை முடித்து இராஜ சபைக்குச் செல்ல முயலவே இந்திரசேனை வணங்கி, "என் பிராணநாதா! நாம் இதுவரையிலுஞ் சும்மா இருந்துவிட்டோம். நமது புத்திரிகளுக்கு மணவினை முடித்துநாம்பார்க்கவேண்டாமா? அவர்களும்மங்கைப் பருவமடைந்து நாலைந்துவருடங்களாயினவே. என்றைக்குங் குழந்தைக ளல்லரே! பஞ்சபூத பௌதிகங்களாலான இத்தேகம், தன் இந்திரியங்களா லாட்டிவாட்டப்படுவது, எல்லாச் சரீரிகளுக்கு மியல்பேதான் அன்றோ?' என்றாள். அரசனக் குறிப்பை யுணர்ந்து, 'நமது புத்திரிகளுக்குத் தகுந்த வரர்கள் எங்கேயிருக்கிறார்கள்? அப்படி யிருந்தாலும், இருவரும் ஒருதாய் பெற்ற சகோதரர்களாயும் ஒருவரை யொருவர் பிறிந்திராத ஒற்றுமை யுடையவர்களாயும், அரசகுமாரர்களாயு மிருக்கவேண்டுமே; இதற்கு நாமென்ன செய்யலாம்!" என்று வருந்தப் பத்தினிகளிருவரும் மனந்தளர்ந்து சற்றுநேரம் ஒன்றுந் தோன்றுமல் நின்று, பிறகு "ஓ பிராணநாதா, நமது முதன்மந்திரியிடம் இந்தச் செய்தியை மிகவும்இரகஸ்யமா யுரைத்து எல்லா இராஜதானிகளுக்குந் தூதுவரையனுப்பி விசாரிக்கச் செய்வதே தகுதியாய்த் தோற்றுகிறது" என்ன, அரசன் விக்ரமசேனனை வரவழைத்து நடந்ததைச்

சொல்லி, "உம்மால் இக்காரியம் ஆகவேண்டியதே தவிர மற்றொருவரா லாவதன்று. ஆகையால் கூடிய விரைவில் இதனை நீர் முயலவேண்டும்" என்றான். விக்ரமசேனன் வணங்கி வினயமாய், "ஓ மகாராஜாவே! தேவரீரையொத்த புண்ணியபுருஷர் உலகிலுண்டோ! தேவரீ ரொன்றுக்கு மஞ்சவேண்டாம். சர்வசக்தனுகிய பராபரக் கடவுள் பெண்களைச் சிருஷ்டிக்கு முன்னமே பிள்ளைகளையும் படைத்திருப்பார். காரணமின்றிக் காரியமுண்டாகமாட்டாது. வருவதுதானேவரும்; தேவரீர் இதைக்கருதி யொன்றும் வருந்தவேண்டாம்;' என்று உறுதிபாய்ச் சொல்ல, அரசனும் தேவியர்களும் "ஏதோ இவர் நமக்கு முன்னமே இந்த விஷயத்தில் முயற்சிசெய்து வருகிறார்போலிருக்கின்றது; இனிநாம் வருந்தவேண்டியதில்லை," என்று நினைத்து மந்திரிக்கு விடைகொடுத்தனுப்பிச் சந்தோஷித்தராயிருந்தனர்.

ஊழ்வினையும் ஆள்வினையும்

[668-வது பக்கத் தொடர்ச்சி]

"அமர்க்களத்தில் விசயன்றன் கொடுங்கூர்ங் கணையால் தாக்குண்டு அயர்ந்துகிடந்த கன்னன்பால் கண்ணன் கரந்து ஓர் கிழ அந்தண வடிவங்கொண்டு, 'அவன் ஆவி துறக்காமை அறச்செயற் பயனுதும்' என்று, சென்று அதனையாசிக்க, அதற்கு அவன் 'நான் நன்னிலையாய்த் தக்கவிடத்தில் இருக்குங்கால் வந்து கேட்டிலையே' என்று வருந்தி, ஈண்டுஉள்ளதைக்கேட்டால் தருகுவன்' என்று கூற, இதுகாறும் செய்தவத் தருமத்தின் பயனை எல்லாம் தாரைவார்க்கும்படி தயாபரன் கேட்கவும் இயல்வதேவேண்டினன் என்று வள்ளல்மகிழ்ந்து தன்உடலில் தைத்திருந்த அம்புகளில் ஒன்றைஇழுத்து அதன்வழிவரும்செங்குருதியை நன்னீராக்கொண்டு, அறப்பயனை இறைவனு மந்தணற்கு அன்புடன் அளிக்க, அந்தணமுனிவன் மகிழ்ந்து தன் உண்மையைக்கூறி, மல்லலங் தொடையல் நிருபனைவியந்து "நீ வேண்டிய வரங்கள் சொல்லுக தருதும்" என்றுரைத்தான். வரையாக்கொடை வள்ளலாம் வல்வினைமாயப்பெற்றகன்னன் "அல்லல்வெவ்வினையால்இன்னமுற்பவ முண்டாயினு மேழெழு பிறப்பும் இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரையா இதயம் நீ யளித்தருள்" என்று கேட்டான். என்னே, மரணத் தருவாயிலும் அவன் இதயம் இருந்தவாறு. மைத்துனனும் கண்ணன், மனமலர் உகந்து உகந்து அவனை கைத்தலமலரால் மார்புறத்தழுவிக் கண்மலர்கருணை நீராட்டினன். பின்னர் மூவரும் ஒருவனு மூர்த்தி" எத்தனை பிறவி எடுக்கினும் அவற்றுள் ஈகையும் செல்வமும் எய்தி முத்தியும் பெறுதி முடிவில்' என்றுரைத்தான். அறப்பயன் கருதாது ஆதுலர்க்கு அனைத்துமளித்து அதன் பொருட்டே தன்னையுமிழந்த தருமசீலன் வேண்டிய வரத்திற்கு உதவியான செல்வமும் தந்ததுவேறேதிற்க' 'முத்தியும் பெறுதி' என்று முதல்வன் உரைத்த முடிவின் பயனை,

போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைக்குங்
குஞ்சர ராசன்முன் னன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன்.

இவ்வாறு கண்ணுற்ற கன்னன்,

நீலநெடுங் கிரியுமழை முகிலும் பௌவ
நெடுநீருங் காயாவு நிகர்க்கு மிந்தக்
கோலமும்வெங் கதைவாளுஞ் சங்கு நேமி
கோதண்ட மெனும் படையுங் குழையுங்காதும்
மாலைநறுந் துழாய்மார்பும் திரண்ட தோளும்
மணிக்கழுத்தும் செவ்விதழும் வாரி சாதக்
காலைமல ரெனமலர்ந்த முகமுஞ் சோதிக்
கதிர்முடியும் இம்மையிலே கண்ணுற் றேனே.

மறுமையில் கண்டு களிக்கவேண்டிய நின் திருவுருவப் பேற்றை இம்மையிலே காணப்பெற்றேனே என்று மகிழ்ந்தான். தான் பெற்ற பெரும்பாக்கியத்துக்கு ஆனந்தப்பட்டு வியந்தவனுய்,

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாயலங்கல் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்
ஊன்பெற்ற பகழியினு லழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின் றிருநாம முரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னை யன்றி
இருநிலத்தில் பிறந்தோரி லியார்பெற் றூரே.

அருந்தழன் மா்மகம் புரிந்தும் கடவுட்கங்கை
யாதியாம் புனல்படிந்து மனில யோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசை நேர்ந்தும்
எங்குமாகிய வுன்னை இதயத் துள்ளே
திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாம்
சிறக்கியனைத் துயிருக்கும் செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கள் மிகப்பயின்றும் பெறுதற்கெட்டாப்
பெரும்பயனின் றிருவருளால்பெறப்பெற்றேனே

என்று போற்றிய வண்ணமாகக் குந்திதேவி மடியில் உடல்கிடப்ப ஆதிமூர்த்தியின் அடிப்போது அலங்கரிக்க ஆவி துறந்தான். பயன்கருதாது செய்த அறப்பயன் பரமபதம் எய்துவித்ததை நாம் இதனுல் நன்கு உணரப் பெறுவோம்.

அவாவும் தன்னலமும் பயன்கருதலு மற்ற பெரியோர் தீனபந்துவாய் ஏழை பங்காளராய்த் தன்னையுமிழந்து பரோபகாரம் புரிவார்கள். 'இது கற்றவர்களுக்குப் பல்ன் அபகாரிகள் பக்கலிலே உபகாரம் பண்ணுகை' என்பதையும் நாம் முன்னர்க் கண்டோம். பகைவனென்றும் நட்டோனென்றும் அவர்களுக்கு வேற்றுமையில்லை. நாயனுரும்,

"இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு."

என்று கூறுகின்றார். பிறர் செய்த தீங்கை நினையாது பரோபகாரம் செய்வதுதான் பரமனைப் பராவியதாகும்.

படமாடும் கோயில் பரமற் கொன்றீயின்
நடமாடும் கோயில் நம்பற் கங்காகு
நடமாடும் கோயில் நம்பற் கொன்றீயின்
படமாடும் கோயிற் பரமற்கங் காமே.

என்றார் திருமூலமும். உலகிலிருக்கும் இயற்கைப்பொருளின் தத்துவத்தை நோக்கினுலும் ஒருவர்க்கொருவர் உதவிக்கொள்ளல் வேண்டுமென்பது தெற்றெனத் தெரியும். மரங்கொடி செடிகளின் உயிர்ப்பாம் காற்று இன்றேல் நாம் இறந்துபடுவோம். நம்முயிர்ப்பாம் காற்று இன்றேல் அவைகள் வாழா. இவ்வாறே ஒன்றிற்கொன்று உதவிக்கொள்ளும் தன்மை நமக்குத் தெரியாமலும் நடைபெறுகிறது. ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும்வாயெல்லாம் செய்தல் வேண்டும். செல்வம்பெற்ற ஒருவன் பிறர்க்கு அதனுல் உதவாதுபோயின் பிறர் செல்வத்தைக் களவாடியவன் என்றே அறிஞரால் கருதப்படுவான்.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவர்க்கு
முண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

கடல்சூழ்ந்த உலகமுழுதுந் தன்னுடைமையாய்ப் பெற்று வெண்கொற்றக் குடைக்கீழ் ஆட்சிசெலுத்துமரசற்கும், இரவும் பகலும் ஓயாது விலங்குவேட்டையாடச் செல்லும் கல்வியில்லாத ஒருவனுக்கும், உண்ணப்படும் பொருள் நாழியே, உடுக்கும் உடை இரண்டே; ஏனையவை யெல்லாம் ஒக்குமாதலால் செல்வம் பெற்றதன் பயன் ஈதலே; தானே உண்பானுயின் பலவகையில் தவறுவோன்—என்று, மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரர் பாடியுள்ளார். இவ்வாறு பிறர்நலம் பேணிவாழும் பெட்புளோர் எத்தனைத் துன்பம் வரினும் அதை ஓர் பொருட்படுத்தாது பிறர்க்குழைத்தலே தம் இயற்கைக் குணமாகக் கொள்வர்.

வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்

என்றும்

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.

என்றும், கூறியபடி அவர்கட்குவரும் துன்பமே துன்பத்தை அனுபவிக்கும் ஆதலால் அதற்கு அவர்கள் அஞ்சுவதில்லை. துன்பம் வருதலின் காரணமும் அதை நுகரவேண்டிய கடமையும் அறிந்தோராதலால் "சுகம் ப்ரம்மம் ஜகத்துக்கம்'—சுகமாவது ப்ரம்மத்தில் லயித்தல், துக்கமாவது உலகத்தில் உழலுதல்-என உலகிலிருந்தும் வினையை ஒழித்துப் பிரம்ம மறிந்தோர் சுகத்தை அனுபவிப்பர். துன்பத்தையே இன்பமென மயங்கி அறிவில்லார் துய்க்கின்றார்கள்.

ஓரி னெய்தல் கறங்க வோரி
னீர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புரைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாள
னின்னு தம்மவிவ் வுலக
மினிய காண்கவி தியல்புணர்ந் தோரே.

ஓர் வீட்டில் சாப்பறை யடிக்கவும், ஓர் வீட்டில் மணவியம் ஒலிக்கவும், நாயகனோடு கூடியமகளிர் பூவணியணியவும், பிரிந்த மகளிர் கண்களில் நீர்வார்ந்து துளிப்பவும் நான்முகன், இவ்வாறு படைத்தான். இவ்வுலகின தியற்கை கொடியது. ஆதலின் இவ்வுலகினது தன்மை யறிந்தோர் வீட்டின்பந்தரும் நல்லசெய்கைகளை அறிந்து செய்துகொள்ளவேண்டும்" என்று பக்குடுக்கை நன்கணியார் பாடுகின்றார்.

உலகியல்புணர்ந்து நல்லன ஆற்றி நற்பேறடையும் நல்லோர், நலமந்தமில்லதோர் நாட்டில் வதியும் நாரணனை மறவார். உலகின் நிலையாமை அறிவதும், தருமம் முதலாம் நற்செயல் செய்வதும், இறைவன்றன் நிலை யெய்தற்காகும். அதைத் தடைப்படுத்துவது வினை. அதை ஒழித்தலே இறையமையாமை என்று அதற்கேற்ற உபாயம் இதுகாறுங் கண்டோம். "மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும் தக்கநெறியும். தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையும்" உணரவேண்டியதைப் பட்டர் கூறினர். 'தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை' என்றே கூறியுள்ளார். அதை நீக்குவான் எம்பெருமா னருளைப்பெற வேண்டும். அதற்கு அவனை வழுத்துதலே வழியாகும். அவன் திருநாமத்தைத் தியானித்தலே நெறியாகும். சாகுநாளளவும் மாளாவினைசெய்த 'அஜாமீளனும்' மலர்மகள்கோனை வழுத்தி மாயவன் திருவடியடைந்தான். "நலியும் நரகமும் நைந்து நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை" என்றுசொல்வது அவனைப்போற்றுதலேயாம். இதனுலன்றே இருடிகளும் ஆழ்வார்களும் எளிதில் எம்பெருமானடி யெய்தப்பெற்றனர். வேத முதல்வன் ஓதியருளிய மாமறையில் 'கலிச்சந்தரணோபநிடதம்,

ஹரே ராம ஹரே ராம ராம ஹரே ஹரே [ஹரே ஹரே ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண இதிஷோடசகம் நாம்நா கலிகல்மஷ நாசனம்

(முதல் இரண்டடிகளில் கூறுகின்ற) திருநாமங்கள் பதினறும் எவரொருவர் தியானிக்கின்றாரோ அவர் தம் பாவங்களெல்லாம் நாசமாகும், என்று கூறுவதாலும், திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில்

கூற்றமும் சாரா கொடுவினையுஞ் சாரா
மாற்றமும் சாரா வகையறிந்தேன்—ஆற்றங்
கரைகிடக்குங் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைகிடக்கு முள்ளத் தெனக்கு.

'அவன் உரைகிடக்கு முள்ளத்தவரைக் கூற்றமும் சாராது கொடுவினையுஞ் சாராது' என்றருளுவாராதலால், ஆண்டவன் அடிமலர்போற்றி நாம் ஆற்றிய வினையனைத்தும் ஒழித்து அந்தமில் பேரின்பம் அடைவோமாக. வினையை ஒழிப்பதற்கு உற்ற உதவி இதுவேயாகும். 'நாராயணு வென்னு நாவென்ன நாவே.'

திரைத்திருப்பாற் கடல்கடைந்து தெள்ளமுதும்
பருக்களித்த திருமாற் செய்கை
யுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினைசென்
றணுகாதென் றுரைப்ப தொன்றே
வுரைத்திருப்பா ரிடத்தழைத்த
வூழ்வினைசென் றணுகாமை
வரைத்திருப்பா ரிடத்திழைத்த வல்வினையும்
வரைத்தவர்யான் மருவாதன்றே.

(மாறன் பாப் பாவினம்)

இக்கட்டுரை முற்றிற்று.

ஆண்டாள்

2. கல்வியும் கவித்திறமையும்.

[669-வது பக்கத் தொடர்ச்சி]

2. ஐந்திணைத் தோற்றமும் அம்மையார் பதிகங்களும்.

நாச்சியார் தம் திருப்பதிகங்களை எத்திணையிற் பாடிஞர் என்று நாம் வினவின், யாவும் முல்லைத்திணையென்றே அவசரத்திற் பகர நேரும். ஏனெனில் எப்பதிகத்திலும், முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருளென வெடுத்துக் காட்டத்தக்க பொருள்கள் யாவும் பெரும்பாலும் முல்லைநிலப் பொருள்களாகவே காணப்படுகின்றன *. காடும் காட்டைச் சார்ந்த இடமும், ஆயர்பாடியும், கண்ணனுடன் கலந்து விளையாடுந் தலங்களுமே எங்கும் காண்கின்றோம். நிலமும்பொழுதுமாத்திரமன்றித் தெய்வம்முதலிய கருப்பொருள்கள் யாவும் முல்லையையேபெரும்பாலும்குறிக்கின்றன. பறையும்†, யாழும் முல்லைத்திணைக்கே உரியனவாயும் காட்டும் இவ்வம்மையின் சொற்றொடர்கள் ‡. ஆயினும் இவர் திருப்பதிகங்கள் முல்லைத்திணைக்கே உரியவென் றெண்ணல் ஒருதலைப்பட்ச மாகும். ஆதலால் முன்னர் ஏனைய நாற்றிணைகளை எவ்வாறு கோதையார் பகர்கின்றன ரென்றுராய்ந்து பின்னர் முல்லைத்திணையிற் புகுவோம்.

குறிஞ்சி

கோதையார் திருப்பதிகத்தில் குறிஞ்சித்திணைவரும் சந்தர்ப்பம் பெரும்பாலும் திருவேங்கடம் * கோவர்த்தன சம்பந்தங்களிலேயாம். இன்றேல் குறிஞ்சியின் கருப்பொருள்களிற் சில கண்ணனுக்கு உவமையிற் காட்டுஞ் சந்தர்ப்பங்களிலு மாகும். திருப்பாவையில் 23-ம் பதிகத்தில் குறிஞ்சிநில மிருகமாகிய சிங்கத்திற்குப் பூவண்ணனை ஒப்பிட்டுக்கூறிச் "சீரிய சிங்காசனத்திலிருந்து, யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்க" வென்பர். குன்றைக் குடையாய் எடுத்தகாலை, முல்லை நிலக்கடவுளான கண்ணனை, குறிஞ்சிநிலக் கடவுளான முருகக் கடவுள்போல்‡ திருக்கை வேலுடன் அம்மையார் விளக்குகின்றனர். அதற்குத் தக்க சேவகமும் $ குறிஞ்சிப் பறையையும் திருப்பாவையின் 24-ம் பாசுரத்திற் காண்க.

குறிஞ்சிநிலமான வேங்கடத்தில், கோதையார் அத்திணைக்குரிய மூவகைப் பொருள்களையும்* இலக்கணவொழுங்கில் தனது 8-வது திருமொழியில் அமைத்துக் காட்டுகின்றனர். விண்ணீல மேலாப்பு, என்னும் தலைப்புப்பெற்றமேகவிடுதூது †என்னும் திருப்பதிகம் இந்நில வியலை அகத்திணை யியலாயும் புறத்திணை யிய

---

* பட்டி மேய்ந்தோர் காரேறு
பலதே வற்கோர் கீழ்க்கன்றய்
இட்டீ றிட்டு விளையாடி
இங்கே போதக் கண்டீரோ
இட்ட மான் பசுக்களை
இனிது மறித்து நீரூட்டி
விட்டுக் கொண்டு விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே.
14-வது திருமொழி-1.

† நாயகனாய் நின்ற நந்தகோப னுடைய
கோயில் காப்பானே கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய் !
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந் தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மாநீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய் !
திருப்பாவை - 16.

‡ கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப்பெற்றன்
காடுவாழ் சாதியு மாகப்பெற்றான்
பற்றி யுரலிடை யாப்புமுண்டான் ;
பாவிகா ளுங்களுக் கேச்சுகொல்லோ
கற்றன பேசி வசையுணாதே
காலிக ளுய்ய மழைதடுத்துக்
கொற்றக் குடையாக வேந்திநின்ற
கோவர்த் தனத்தென்னை யுய்த்திடுமின்.
12-வது திருமொழி - மற்றிருந்தீர் 8.

* மதயானை போலெழுந்த மாமுகில்காள் வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் பாம்பணையான் வார்த்தையென்னே
கதியென்றுந் தானாவான் கருதாதோர் பெண்கொடியை
வதைசெய்தா னென்னுஞ்சொல் வையகத்தார் மதியாரே.
8-வது திருமொழி ; (விண்ணீலமேலாப்பு) 9.

‡ அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி !
சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி !
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி !
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி !
குன்று குடையா யெடுத்தாய் குணம்போற்றி !
வென்றுபகைகெடுக்கும் நின்கையில்வேல்போற்றி!
என்றென்றுன் சேவகமே யேத்திப்பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்!
திருப்பாவை 24.

$ அன்றுலக மளந்தானை யுகந்தடி
மைக்கண வன்வலி செய்யத்
தென்றலும் திங்களும் ஊடறுத்
தென்னைநலியு முறைமை யறியேன்
என்றுமிக் காவிலிருந் திருந்தென்னைத்
ததர்த்தாதே நீயுங் குயிலே
இங்குநா ராயணனை வரக்கூவாயே
லிங்குத்தை நின்றும் துரப்பன்.
5-வது திருமொழி - (மன்னு பெரும்புகழ்) 10.

*"குறிஞ்சி பாலை முல்லை மருத
நெய்த லெந்திணைக் கெய்திய பெயரே" 379.
அவைதாம்
"முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொரு ளெனமுறை
நுதற்பொருள் மூன்றினு நுவலப் படுமே" 380.

† இதன் சூத்திரம்:—
நோயு மின்பமு மிருவகை நிலையிற்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
வெட்டன் பகுதியும் விளங்க வொட்டிய
வுறுப்பிடை யதுபோ லுணர்வுடை யதுபோன்
மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியு
மவரவ ருறுபிணி தமபோற் சேர்த்தியு
மறிவும் புலனும் வேறுபட நிறீஇ
யிருபெயர் மூன்று முரிய வாக
வுவம வாயிற் படுத்தலு முவம
மொன்றிடத் திருவர்க்கு முரியபாற் கிளவி.
இலக்கண விளக்கம் - 570.

லாகவும் காட்டுகின்றது. ‡ வாகையின் இறுதியே நாயகன் மீட்சியாதலால் கார்காலத்தில் ஆவிகாத்திருத்தல் நாயகியின்கடமையென்றும். இத்தகையசுகப்பொருட் சுவைகளை, மேகங்களை ஒருகூட்டத்தி லடக்குவது போல்,நாச்சியார் தன்னுடைய பத்து விருத்தங்களில் குறிஞ்சிசில விலக்கணங்களைத் தொகுத்துச்சுட்டி வகுத்துங் காட்டுகின்றார். வேங்கடம் குறிஞ்சியாதலால் அதற்குரிய முப்பொருள்களையும் காண்க :—

மலையும் சுனையும காட்டுவான் நாச்சியார் முதல் விருத்தத்திலேயே சுனையினின்று தெண்ணீர் பாய்வதைக் குறிப்பிடுகின்றார். *முதற்பொருள்களில் இரண்டாவதாய்க் காட்டப்பட்டது பொழுது†. இதனைப் பெரும்பொழுதென்றும்,‡ சிறுபொழுதெனறும் இருவகையிற் பிரித்துக் கூறுவார். இத்திணையின் பெரும்பொழுது கூதிர், முன்பனிக் காலங்களாகும். $சிறுபொழுது இதற்கு யாமம் என்பர். இவைகளை இவர் தனது பதிகத்தில் காட்டாததுபோல் காட்டியிருப்பதை நோக்குக. இவ்வம்மையார் மேகவிடுதூதின் 6ம் பாட்டில் 'சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்! மாவலியை நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்!" என்றதனால் கூதிர்க்காலத்தையும் *, 9-ம் பாட்டில், மதயானை போலெழுந்த மாமுகில்காள் வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்' என்றது, முன்பனிக்காலத்தையும் †, முறையே நாச்சியார் பெரும்பொழுதாகக் குறிப்பிடுவதுபோல் காணப்படுகின்றது. இந்நிலச் சிறுபொழுதாகிய யாமத்தைக் குறிக்குமிடத்தும், அப் பொழுதுக்குத் தக்கதான ‡ உறக்கம் இல்லையென்றும் அப்பொழுதின் நிறமும் $ கண்ணன்கருமையும் ஒன்றெனவும் மொழிகின்றனர். அரிமுகன் அச்சுதன் ¶என்ற விடத்திலும் இக்குறிஞ்சியின் தன்மையை ஆண்டாள் காட்டினர் போலும்.

வேங்கடமென்னும் குறிஞ்சியிலுள்ள கருப்பொருள்கள்— * தெய்வம் முதலாகத் தொழில் ஈறுகப் பதினன்காகும். அவையே,

"விறற்சேய் பொருப்பன், வெற்பன், சிலம்பன்,
குறத்தி, கொடிச்சி, குறவர், கானவர்,
குறத்தியர், கிளி, மயில், மறப்புலி, குடாவடி
கறையடி சீயம், சிறுகுடி, யருவி
நறுஞ்சுனை, வேங்கை, குறிஞ்சி, காந்தள்
ஆரந் தேக்ககி லசோக நாகம்
வேர லவனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகம் குறிஞ்சியாழ், குறிஞ்சி
வெறிகொள் ஐவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல், செந்தே னழித்தல்,
செழுங்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே."

என்றார் இலக்கண விளக்கத்தார். ஆயினும் இத்துணையும் மேகவிடுதூது என்னும் திருப்பதிகத்தில் ஆண்டாள் திருவாய்மலர்ந்திராவிடினும், அவை பெரும்பாலும் குறிப்பிற் காட்டப்பட்டமையால் மற்றையவற்றை உரையிற் கோடலே சிறப்பாகும். இவற்றுள் †சில திணைமயக்கம் போலும், வேறு பதிகங்களிற் கோதையார் கூறியுள்ளார். ‡ அவற்றைக் கண்டுழி

‡ வான்கொண்டு கிளர்ந்தெழுந்த
மாமுகில்காள்'வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத்
திரண்டேறிப் பொழிவீர்காள்!
ஊன்கொண்ட வள்ளுகிரால்
இரணியனை யுடலழித்தான்
தான்கொண்ட சரிவளைகள்
தருமாகில் சாற்றுமினே.
8-வது திருமொழி 57.

* i. "நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே"
இலக்கண விறக்கம் 381.

ii. வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தரு மிடனே
யெனவீ ரைந்து மியம்பிய நிலனவை
குறிஞ்சி முதலா வகனைந் திணைக்கும்
உறுந்திற முறைடா னிரண்டிரண் டுரிய.
இலக்கண விளக்கம் 382.

† பெரும்பொழு தென்று சிறுபொழு தென்று
இரண்டு கூற்றத் தியம்பிய பொழுதே. ஷை 383.
காரே, கூதிர், முன்பனி, பின்பனி,
சீரிள வேனில், வேனி லென்றாங்
கிருமூன்று திறத்தது பெரும்பொழுது. அவைதாம்
ஆவணி முதலா விரண்டிரண் டாக
ஆடி யிறுதிய வாயுங் காலே. ஷை 384.
மாலை, யாமம், வைகுறு, வென்று
காலை, நண்பகல், ஏற்பாடு என்று
அறுவகைத் தென்ப சிறுபொழுது அவைதாம்
படுசுடர் அமயந் தொடங்கி ஐயிரு
கடிகை யளவைய காணுங் காலே. ஷை 385,

$ அவற்றுள்
கூதிர், யாமம், முன்பனி யென்றிவை
ஓதிய குறிஞ்சிக் குரிய வாதலும். ஷை 386

* இக்காலத்தில் மலைமீது சந்திரன் தோற்றம் மற்றொரு இடத்திலும் வரையப்பட்டது :—
தடவரையின் மீதே சரற்கால சந்திரன்
இடையுவா வில்வந்து எழுந்தாற்போலே நீயும்
வடமதுரை யார்மன்னன் வாசுதே வன்கையில்
குடியேறி வீற்றிருந்தாய் கோலப் பெருஞ்சங்கே.
7-வது திருமொழி (கருப்பூரம் நாறுமோ) 3.

† திருப்பாவையில் முன்பனிக்கால் வர்ணனை காண்க:—
மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்......"
திருப்பாவை 1,

‡ ஒளிவண்ணம் வளைசிந்தை
உறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா லிட்டென்னை
யீடழியப் போயினவால்..........." 3.

$ மாமுத்த நிதிசொரியு மாமுகில்காள் வேங்கடத்துச்
சாமத்தி னிறங்கொண்ட தாடாளன் வார்த்தை யென்னே
காமத்தீ யுட்புகுந்து கதுவப்பட் டிடைக்கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கு இலக்காய்நா னிருப்பேனே? 2.
8-வது திருமொழி (விண்ணீலமேலாப்பு) 2.

¶ வரிசிலை வான்முகத் தென்னைமார் தாம்வந்திட்
டெரிமுகம் பாரித்தென் னைமுன்னே நிறுத்தி
அரிமுக னச்சுதன் கைம்மேலென் கைவைத்துப்
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் றோழிநான்.
6-வது திருமொழி (வாரணமாயிரம்) 9.

* ஆரணங் குயர்ந்தோ ரல்லோர் புள்விலங்கு
ஊர், நீர், பூ, மர, முணுப் பறை யாழ்பண்
தொழிலெனக் கருவீ ரெழுவகைத் தாகும்.
இலக்கண விளக்கம். 387.

† முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு
மரபின் வாராது மயங்கலு முரிய. ஷை 394,

‡சந்தொடு காரகிலும் - சமக் - தடங் கல்பொருது
வந்திழி புஞ்சிலம்பாறுடை-மாலிருஞ் சோலைநின்ற
சுந்தர னைச்சுரும்பார்-குழல்-கோதைதொ குத்துரைத்த
செந்தமிழ் பத்தும்வல்லார்-திரு-மாலடி சேர்வர்களே.
9-வது திருமொழி (சிந்துரச் செம்பொடி) 70.

திருவேங்கடமலையி னியல்பும் அதன் இயற்கைநிலையும் மெனக்கொள்க. நாகரிகமுயர்ந்து ஐந்திணைகள் உருவம் குலைந்திருக்கும் நமது நாளிலும், திருமலையைச் சுற்றிலும் இக்கருப்பொருள்கள் காணப்படுகின்றன. நீலோர்ப்பலம், மூங்கில்முத்து, குளிர் அருவி, தேன், குங்குமம் என்னும்சொற்கள் மேகவிடுதூதில்காணும் போது குறிஞ்சிக் கருப்பொருள்களை நினைவிலெழுப்புகின்றன.

இந்நிலத்திற்கு உரிப்பொருள் புணர்தலும், புணர்தலின்நிமித்தமு மாகுமென்பர் தொல்காப்பியனுர். புணர்ச்சி யுண்மை எத்தகையதெனின் சுத்தமான ஜீவாத்மாவானது பரமாத்மாவை அடைந்து ஆனந்திப்பது. நிரபாதியான ஜீவனைப் பரமன் தானே வலிதில் வந்து ஆண்டு நடலைநோயைத் தீர்த்தல்-சிற்றின்பத்தால் காமநோயழிவதுபோல், பேரின்பத்தால் பேராப் பெருங் காமமான நடலைநோ யொழிதல் :—

உலங்குண்ட விளங்கனிபோல்
உள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்கென்
நடலைநோய் செப்புமினே

என்று 6-ம் பாசுரத்தில் கோதையார் கூறுகின்றது காண்க. இவ்விரண்டு வரிகளே இப்பத்துபாட்டின் மத்திய கருத்தாகும். இக்கருத்தைச் சிற்றின்பருபத்தில், மணிவாசகப்பெருமான் திருக்கோவையார் பாடும்நடையில், கோதையாரும் கோவிந்தனிடம் இன்பம் வேண்டுகின்றூர். ஆயினும் வேண்டும் இன்பம் காமக்கிளர்ச்சியென்றெண்ணல் குற்றமாம். * உருவகமாகவே, யாம் இவ்வம்மையார்மொழிகளை முற்றுமெண்ணவேண்டும். மனிதனுப்க் கடவுள் வந்து சாமன்ய மானிட இன்பத்தைத்தருவான் என ஆண்டாள் இச்சிக்கவில்லை யென்பது, இவர் பற்பல இடங்களிலும் நடலை † வாழ்க்கையைக் கண்டிப்பதால், உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குகின்றது.

இதற்குத் தக்கவாறே ஆண்டாள் இப்பதிகத்தின் திருக்கடைக்காப்புச் செய்யுளில் "போகத்தில் வழுவாத புதுவையர்கோன்" என்று தன் தந்தையைக் குறிக்குமிடத்து, தன்னை வளர்த்த பிதாவே, சிற்றின்ப வாழ்க்கையில் என்றும் நழுவாத சுத்தப் பிரமசாரியென்றும், அத்தகைய திருக்கரங்களால் வளர்க்கப் பெற்ற இம்மாதுசிரோன்மணி, உலகவாழ்க்கைக்குச் செல்லும் மனமுடையவ ரல்லரென்றும், யாவும் உருவகத்தில் கூறினர். மனோவாக்குக்களுக்கு அதீதமான பேரின்பத்தைக் குறித்துக்காட்டச் சற்றுச் சிறு சாயலுடையது உத்தம காதலன்காதலி யின்பமாதலால், அவ்வுருவகத்தில் காட்ட நேர்ந்ததென்று விளக்குவதுபோல், பத்தாம் செய்யுளைத் திருவாய்மலர்ந்தருளினுரென்றும் கொள்க. * மானிடவாழ்க்கைக்கும் மானிட இன்பத்திற்கும், ஆண்டாளுக்கும் தொலைதூர மென்பது ஏனைய திருப்பதிகங்களாலும் விளங்கலாகும். மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம், போகத்தில், இவர் சிறிதும் வழுவாத தன்மையேயாம். அஃதே செங்கண்மால் சேவடிக்கீழ், அடிவீழ்ச்சி விண்ணப்பமாம் †.

*மின்னுகத் தெழுகின்ற மேகங்காள் வேங்கடத்து
நன்னுகத் திருமங்கை தங்கியசீர் மார்வர்க்கு
என்னுகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும்
பொன்னுகம் புல்குதற்கென் பரிவுடைமை செப்புமினே.
8-வது திருமொழி 4.

† நடலைப் படமுழங்கு தோற்றத்தாய் நற்சங்கே
7-வது திருமொழி - 2 (4-வது வரி).

* வானிடை வாழுமவ் வானவற்கு
மறையவர் வேள்வியில் வகுத்தவவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடிப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென்
றுன்னித்தெ ழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே.
முதல் திருமொழி (தையொருதிங்கள்) 5.

† சங்கமாகடல் கடைந்தான்
தண்முகில்காள் வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ்
அடிவீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கைமேல் குங்குமத்தின்
குழம்பழியப் புகுந்தொருநாள்
தங்குமே லென்னுவி
தங்குமென் றுரையீரே.
மேகவிடு தூது 7.

மலர்வனம்.

[676-வது பக்கத் தொடர்ச்சி]

விதியில்லா மதிபாலன்.

ஈது முன் னிகழ்ந்தவண்ணம்; இனியிந்த வீரச்செம்மல் ஆசையால் உந்திச்சென்று தன்னருந் தந்தையை எதிர்ப்பட்டவாறும், ஆங்கவன் ஆசையோடாவியும் முடிந்தவாறும் ஆழ்துயரால் சூழ்ந்துள. பாரஸீகப் பாவலன் பர்துஸி என்பான் பாடிய "ஷா நாமா" (இராஜ நாமாவளி) என்னுமம் மாபெருங் காவியத்துள் நிகழுமோர் காதை யீது. அந்நூல்வழி ஆங்கில கவி மாத்யூ ஆர்னுல்டும் அரிதின் பாடினுன். அன்னவர் உரையினை உட்கொண்டு யாமும் ஒருவாறு இப் பருவரற் செய்தியைப் பகரலாவோம். அவலத்திலும் சுவையுளது. கருதியவா ருகாது, தந்தையுடன் தன் இறுதியையுந் தேடியடைந்த அவ்வருமந்த திருமைந்தன் மதிபாலனுக்குக் கண்ணீர் ஒன்றிரண் டுதிர்க்க நண்பர்காள், இன்று எம்முடன் வம்மின்.

அன்னைபால் விடைகொண்ட அவ் விளவல் அங்ஙனே தன் அரையனைக் குறுகி, இரக்கும் உதவி ஈதென்றியம்புதலும், வியந்த மன்னவன் பரிவுங் கூர்ந்து, "எத்திசை நாடுவாய், இளையோய், நீ எவ்வயின் வினவுவாய். ஊர்தொறும் வீணே திரிந்தந்த உருத்திரசூரனைத் துருவலாற் கருமமில்லை. போரென்னலோடும் பொருப்பன்ன இருதோளில் தினவுதின்ன அன்னவனை நின்பால் தூண்டி உந்தவல்லதோர்வகை புரிதல் வேண்டும். ஆதலின் வீர, உன் சித்தமும் என் வெற்றியும் முற்றும் வண்ணம், அரசரென் றிருப்போரை எல்லாம் எம்கழல் பணிவிக்கக் கடும்படை

திரண்டெழுந்து இத்தரணி முழுவதும் புகுந்துழக்குவோம். சிறுவனேனும் விறலோய், நீயேயச் சேனைக்குத் தலைவனுவாய்" எனச் சாற்றினுன். அன்னவாறே நாளாறில் மண்டுஞ் சமர்கொண்டு தண்டுமெழுந்தது.

புரிந்த போர்கள் பலப்பல. படைமுனைக்கும் முன்னின்று பொருத வீரன் மதிபாலன் ஈட்டியஇசையும் வளர்ந்தது. எனினும், அவ்விசைதான் போர்த்தூதாகி உருத்திரசூரனை இன்னும் வெங்களம் வருவிக்கவில்லை. வெற்றியும் புகழும் விளைந்ததேனும் தந்தையை எய்தப்பெறு இம்மைந்தன் சிந்தை களைப்படைய இறுதியில் இவ்வங்கர்கோன் கொற்ற நெடும்படை மகத நாடு மண்டிப் படுபோர் வேண்டுதலும், அம்மகதர் பூபதியும் எதிர்சமர் இருதினங்கள் ஈந்தனன். வெற்றியுந் தோல்வியும் விளங்குமாறில்லை. இரண்டாம் போர் இழைத்த இரவு இருதிறத்தோரும் தத்தம் பாசறைபுக்குத் துயின்றனர். அவர்தம்மில் கண்படைகொள்ளாதான் மதிபாலன் ஒருவனே.

புகர்நிறம் பூசிய வைகறைவானம் தெண்ணீர் நதியில் தோன்றியவேளை, அரவமில்லாப் பாளையத் தகவயின் மறவரெல்லாம் உறக்கத் தாழ்ந்தனர். அவரிடை மதிபாலன்ஒருவனே துயின்றிலன். கங்குல்முழுவதும் பாயலிற் புரண்டனன். புலரியோ டெழுந்தவன் வாள் புடை விசித்து வேந்தன் சிபிரம் விரைவுடன் நண்ணி, மஞ்சத் தருகே மயங்கினன் நிற்க, விழித்தவேந்தன் சிறிதவண் நிமிர்ந்து, "நீயோ யாவன், இருளோ இன்னும் தெளிந்திலது; உற்றசெய்தி உரைப்பாய்" என்ன, மதிபாலன், "யானே, மகிப, அறிவாய் என்னை; கதிரவன் இன்னும் உதித்திலன், படைஞர் துயின்றனர், யானே அயர்ந்திலேன். நீளிரவின் காலமெல்லாம் பாயலிற் புரண்டு கிடந்து, உன்வயின் வந்தேன்; என் இதயம் விழைவதை இயம்புவேன் கேட்பாய். உன் போரெல்லாம் ஊனமில் வகையில் நன்கனம் வென்றேன். சிறுவ னென் வயதில் மனிதனின் ஆண்மை காட்டினே னன்றே, மற்றும் நீ அறிவாய். மண்டிய போரெலாம் மாண்புடன் கடந்து தேடினேன் தேடினேன் ஒருவனைத் தேடினேன்; உருத்திரசூரன் ஒருவனே தேடினேன், கண்டிலன். அன்னுன் தன்னிகர் மைந்தனை நற்போர்புரிந்த செங்கள மொன்றில் ஒருநாள் சேர்வான்என்ற வென்னெண்ணம் எய்திற்றலது. ஆதலின், நிருப, என்னுரைகேட்டு இவ்வரம் ஈவாய். இருதிறச்சேனையும் இற்றைப்பொழுது பொருதிட வேண்டா. ஆளுக்காளாய் என்னுடன் தனிப்போர்புரிய மகதவீரரில் விறல்மிகு ஒருவனை அழைப்பேன். வென்றனெனுயின் அவ்வீரச்செய்தி உருத்திரசூரன் செவியகம் சேர்வதுசரதம். வீழ்ந்தேனுயின்—வேறென், இறந்தோர்தமக்கு உறவினர் வேண்டா. அனிகத்தோடனிகம் மோதி ஆற்றுமவ் வமரின் தமரத்திடையே விறலுடைச்செய்கை விளம்பரமின்றிக் கழிவதாக, தனிப்போர்ப்புகழே தெள்ளிதின் பேசும்" என்றனன். என்னலோடும் அங்கர்கோமான், நெடிதுயிர்த்துத் தன்முன் நின்ற தனிப்போர்க் குரிசிலின் கரங்களை அன்புடன் பற்றி மென்மொழி சில இவை பேசுவான்:—

"ஓ, மதிபால, அமையா இதயம் உழல்பவனுயினுய். உன்பா லன்புடை எம்மோடிருந்து பொதுச்சமர் புரிவதே யமையாதோ! தனிப்போர் செய்து தனி இடர்க்காளாக மற்றேனோ நீ வேண்டுகின்றுய். கண்டறியாவொரு தந்தையைக் காணற்கோ இத்துணை இடர்க்கு நீ உட்படுவது? உருத்திரசூரனைத் தேடும் ஆசையே ஆள்கின்றதெனின், செருக்களத்தில்தேடாது அவனை அமைதியிலெய்திப் புண்படாமேனியோ டொரு அருமந்த மைந்தனை அவன் கரங்களில் ஓ, மதிபாலா, சேர்த்தாற்று குகாதோ!......இசையாய் நீ; ஆயினும் நினக்கிதனில் நன்மையிலதென்று அஞ்சுகின்றதென் னெஞ்சம். தனிப்போரின்றி நீ நின் தந்தையைத் தேடலே தக்கது. என் சொற் கேளாய்—அரிமாக் குருளையை அடக்குவார் யார்! உருத்திரசூரன் மகனை யாரே ஆளவல்லார்? எனின், நின்னிதயம் விழைவதை ஈந்தனன் போதி".

பொழுதுவிடியப் பரிதியும் மேல்எழுந்தது. அங்கர் படைப் பாடிநின் றோர் தூதன் புறப்பட்டு மகதர் சேனையை அடைந்து, அப் படைத் தலைவனைக் குறுகி "அமரின்று இலதாகுக. மகத மறவருள் மாபெரும் வீரனொருவனை, எந்திற விறல்வீரன் மதிபாலனுடன் தனிப்போர் புரியத் தேர்ந்தனுப்புமின்" என்றறை கூவினுன். அதுகேட்ட அப் படைத்தலைவன் அவ்வயின் அகன்று தன்துணைத் தலைவரை யழைத்து, "என் செய, இச்சிறுவன் மதிபாலனுக்கு இணையான வீரன்நந்திறத்தில் யாருளன்? தூதுவன்மொழிகேட்ட நம் படைவீரரனைவரும் துணுக்கமெய்தி நடுங்குகின்றனர். தோற்றேம் என்பதல்லால் வேறோர் சொல் சொல்லற்கில்லை" என்று கவல்தலும், கலிகண்டன் என்பான் ஒரு முதியோன், "அறைகூவி அளிக்குமத் தனிப்போரை நாம் ஏற்கவே வேண்டுமென்று நாணமோ ஏவுகின்றது. ஆயினும் அவ்விளையோனுக்கு நிகரான வீரனே நம்பால் ஒருவனில்லை. மானின் காலொடு மடங்கலின் இதயமுடையா னவன்.....உருத்திரசூரன் நென்னற்கங்குல் இவண்வந்து துனியுடன் தனியே தங்கியுளன். யானவனை நாடிச்சென்று, தனிப்போர்க் கழைத்த அங்கதர் செருக்கையும் இவ்விளவல் பேரையும் சாற்றுவேன். ஒருகால் அவன் தன் முனிவினை மறந்து சமர்செய உடன்படினும் படலாம். இதற்கிடை, நீ சென்று தனிப்போர்க் கிசைந்தோமென்று தெரிவிப்பாய்" எனத்தேற்றி, உருத்திரசூரன் வைகிய படமாட மடைந்தனன்.

தன்பால் வரக்கண்ட கலிகண்டனை அத்தொல்லாண்மைப் பெருமொய்ம்பன், உவகையோடும் எழுந்தழைத்து, "வருக, வருக, இக்கண்களுக்கு இதனினும் இனிய காட்சி வேறில்லை. செய்தியாது? முதலில் இங்கமர்ந்து சிறிதுஉணவருந்துவாய்" என வேண்டினுன். கலிகண்டனே, கூடாரத்தின் வாயிலின்முன் நின்றவாங்கே, "நண்ப, இதுவன்று வேளை. உண்டருந்தி இருப்பதற்கோ அமயம் பின்னர் நேரலாம். இன்றன்று; இன்றைக் கின்றியமையாதனவோ பிறவுள. அணிவகுத்த இருதிறத் தனிகமும் கறுவிநிற்கின்றன. அங்கர் தலைவனே, தம் வீரனேடு தனிச்சமர் செய்ய எம்மில் ஓர் வீரனை யனுப்புமாறு அறைகூவியுளன்—அன்னுன் பேரும் நீ அறிவாய்—மதிபாலன் என்றவனை அழைப்பர்; ஆயினும் அவன் குலமுறை தெரிந்திலை. ஓ! உருத்திரசூரனே உன்னாற்றலே போல்வது இவ்விளைஞன் ஆற்றலும். மானின் காலொடு மடங்கலின் இதய முடையா னவன். அன்றியும், அவன் பருவ வாலிபன், மகதத் தலைவர்களோ முதுமை எய்தினர். அல்லாதார் அவனுடன் செருச் [illegible] கண்களும் இன்று உன்

188933

னையே நோக்குகின்றன. உருத்திரசூர, வேந் தெம்மைக் காவாயேல்தோற்றேம்" என்றனன். உருத்திரசூரன் புன்னகையுடன் பின்வருமாறு எதிர்விளம்பினன்—

"சி போ! மகதத்தலைவர் முதியரேல், யானோ முது மை மிக்கவன். வாலிபர் வலியிலர் என்னல் நேரன்று. நம் நிருபன் போர்ப்பருவங் கடந்திலன். முதியோரை மதியாமல் உதிரவிட்டு இளைய வீரரையே அவன் பாராட்டி வருகின்றான். உருத்திரசூரனை அவன் ஒன்றாகக் கருதுகின்றானலன். ஆதலின் மதிபாலன் முழக்கத்திற் கெதிராக எழுவதற் குரியவன் யானலன். எல்லோரும் அம் மதிபாலன் கொற்றப்புகழைப் பற்றிப் பேசுன்கிறாரென்றால் எனக்கென்! நொய்பள் ஓர் மெல்லியற் புதல்வியன்றி, இத்துணைப்புகழும் வீரமும் வாய்ந்தவோர் மைந்தன்தான் எனக்கிருந்தா லாகாதோ வென்று விரும்புகின்ற தென் னுள்ளம். இருப்பானேல், ஈட்டிய பொருளை இனிது துய்த்து அமைதியோடியானிருக்க, அவனைப் போர்முகம்போக்கி அவன் புகழினைக் கேட்டுக்கேட்டுக் களிப்புக் கைமிக வாழேனோ—நன்றியில்லா மன்னர் குலமெல்லாம் இறந்தொழிக; அவர் பொருட்டு யானிவ் வடுதொழிற் கைகளிற் படைக்கலம் பிடிக்கமாட்டேன்.'

கேட்டனன் கலிகண்டன், கலக்கமெய்தினன். எய்தி, "என்னே, என்னே, சூர, உலகம் என் சொலாதி தற்குரேம் வீரரில் மிக்கானை மதிபாலன் துணிந்தழைப் பதன்றியும் யாவரினும் நின்னையே அவன் தேடிநிற்க, நீயோ நின் முகங்கரந் தொளிகின்றனை. இளைஞரோடு பொருதிழக்காவண்ணம் உலோபிக் கிழவன் ஒருவனே போல் உருத்திரசூரன் தன் புகழைப் புதைத்து வைக்கின்றானென மனிதர் பேசுவாரே..." என்று தூண்டினன்.

உருத்திரசூரனது உள்ளமும் அசைந்தது.—"கலிகண்டா, ஏனிப்படிப் பேசுகின்றாய். இதனினும் சீரிய சொற்கள் செப்புதற் கறிவாய் நீ. புகழுடையனாயினென், அல்லனாயினென்! வீரனாயினென், அல்லனாயினென்! இளையோனாயினென், முதியோனாயினென்! ஒருவன் மிக்கா லென், குறைந்தா லெனக்கென். அவர் யாவரேயாயினும் இறக்கும் இயல்புடைய மனிதரேயல்லரோ; யானோ என்றும் உருத்திரசூரனே அல்லனோ!... புல்லர்பொருட்டு யாரே பெருஞ்செயல் இயற்ற மனங்கொள்வார்! நன்று, உருத்திரசூரன் தன் புகழை எவ்வண்ணம் குவிக்கின்றானென்பது இன்றுகாண். ஒருவரும் என்னைத் தெரிந்துகொள்ளாவகை என் உருவும் பெயருங் கரந்து இத்தனிப்போர் புரிவேன். மாய்கின்ற மனிதனெவனோடும் உருத்திரசூரன் தனிப்போரில் இணையென்று கைகலந்தான் என்னுஞ் சொல் ஒருநாளும் பிறக்கவேண்டா—" என ஒவ்வினன்.

யாப்பிலக்கணம்

செய்யுள்—ஆசிரியப்பா

[671-வது பக்கத் தொடர்ச்சி]

நிலைமண்டில ஆசிரியப்பா.

பெரும்பாலும் இயற்சீர்களும் ஆசிரியத்தளைகளும் பெற்ற அளவடிகள் மூன்றிற்குக் குறையாத பல அடிகளால் அகவலோசையுடன் நடந்து, ஏ, ஓ, முதலிய சில எழுத்துக்களால் முடிகின்ற பா ஆசிரியப்பாவென்றும், அதுவே ஈருத்தடியென்னும் ஈற்றிற்கு அயலடி முச்சீருடையதாயின் நேரிசை ஆசிரியப்பா ஆகுமென்றும் சென்றவாரம் கூறினோம். இனி, நிலைமண்டில ஆசிரியப்பா ஆகுமாறு காண்போம்.

ஈற்றிற்கு அயலடி முச்சீருடையதாகாமல், அதுவும் நாற்சீருடைய அளவடியேயாய் அமைந்த பா, நிலைமண்டில ஆசிரியப்பா. மற்ற வகையிலெல்லாம் நிலைமண்டில ஆசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பாவை ஒக்கும்.

ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்ல தியாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே யாமெங்
கூழைக் கேர்மணங் கொணர்கஞ் சேறு
மாண்டும் வருகுவள் பெரும்பே தையே.

—குறுந்தொகை.

இது ஆறடியான் வந்த நிலைமண்டில ஆசிரியப்பா. நேரிசையாசிரியப்பா போலின்றி ஈற்றிற் கயலடியும் நாற்சீ ரடியாயிருப்பது காண்க.

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே.

—புறநானூறு.

இதுவும் ஆறடியால் வந்த நிலைமண்டில ஆசிரியப்பா.

எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரியகைந் தன்ன பொங்குபல் சிறுமீன்
வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப்
பறைதபு முதுசிர லசைபுவந் திருக்குந்
துறைகே ழூரன் பெண்டுதன் கொழுநனை
நம்மொடு புலக்கு மென்ப நாமது
செய்யா மாயினு முய்யா மையிற்
செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவ
ணுலமந்து வருகஞ் சென்மோ தோழி
யொளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
வெளிறில் கற்பின் மண்டம ரடுதொறுங்
களிறுபெறு வல்சிப் பாண னெறியுந்
தண்ணுமைக் கண்ணி னலைஇயர் தன் வயிறே.

—அகநானூறு.

இது பதின்மூன்றடியால் வந்த நிலைமண்டில ஆசிரியப்பா. 'மணிமேகலை' என்னும் நூலின்கண் நூற்றுக் கணக்கான அடிகளால் வரும் நிலைமண்டில ஆசிரியப்பாக்களைக் காணலாம். அதுவுமன்றி இன்றொன்றும் 'மணிமேகலை'யில் கருதவேண்டும். இதுகாறும் நாம் இங்கு உதாரணமாகக் காட்டிய ஆசிரியப்பாக்களெல்

லாம் ஏ காரத்தில் முடிந்தவை. எனினும், ஓ என் ஈ ஆய் ஐ என்ற எழுத்துக்களிலும் ஆசிரியப்பாக்கள் முடியலாம் என்று முன் கூறினோம். மணிமேகலையில் வரும் ஒவ்வொரு காதையும் ஒவ்வொரு ஆசிரியப்பா. அது ஒவ்வொன்றின் ஈற்றடியையும் நோக்கினால்,

"அணிவிழா வறைந்தன னகநகர் மருங்கென்"
என்றும்,

"கையற்றுப் பெயர்ந்தனன் காரிகை திறத்தென்"
என்றும்,

"மலர்கொய்யப் புகுந்தனள் மணிமே கலையென்"
என்றும், என் என்னும் எழுத்துக்களால் ஆசிரியப்பா முடியக் காணலாம்.

அடிமறிமண்டில ஆசிரியப்பா

இதுகாறும் கண்ட ஆசிரியப்பாக்களின் அடிகள் முறைமாறி நிற்குமானால் பொருள்திரிந்து ஒன்றும் பயவாது போய்விடும். அவ்வாறின்றி எல்லாம் அளவடிகளால் அமைந்த ஆசிரியப்பாவில் அவ்வடிகளை இடமாற்றிவைத்து ஓதினாலும் பொருள் கெடாமல் நிற்குமாயின், அவ்வாசிரியப்பா அடிமறிமண்டில ஆசிரியப்பா எனப்படும்:—

தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே.

—சிதம்பரச் செய்யுட் கோவை.

இது மூன்றடியால் வந்த அடிமறிமண்டில ஆசிரியப்பா. எந்த அடியையும் முன்னும் பின்னுமாய் வைத்து ஓதினும் பொருள் சிறிதும் வேறுபடாமை காண்க.

பதிகளி னதிபதி திருமகள் பதியே
துதிகளி னதிபதி தமிழ்மறைத் துதியே
மதிகளி னதிபதி மாறனுண் மதியே
நதிகளி னதிபதி வரசுர நதியே.

—மாறன் பாப் பாவினம்.

இது நான்கடியால் வந்த அடிமறிமண்டில ஆசிரியப்பா.

இணைக்குறள் ஆசிரியப்பா

முதலடியும் ஈற்றடியும் அளவடிகளாக, இடை இடையே குறளடிகளும் சிந்தடிகளும் மாத்திரமேனும் அல்லது அளவடிகளோடு கலந்தேனும் வரும் ஆசிரியப்பா இணைக்குறளாசிரியப்பா எனப்படும். எது எவ்வாறாயினும் முதலடியும் கடையடியும் நான்கு சீர்களுடைய அளவடிகளாகவே இருத்தல் வேண்டும்:—

நீரின் தண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இது, முதலும் கடையும் அளவடியாகியும், இரண்டும் மூன்றும் குறளடியாகியும், நாலும் ஐந்தும் சிந்தடியாகியும் வந்த இணைக்குறளாசிரியப்பா.

பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக் களிறு போல்வந்
திரவுக் கதவு முயறல்
கேளே மல்லேங் கேட்டெனெம் பெரும
வோரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கியா
முயங்குதொறு முயங்கு மறனில் யாயே.

—குறுந்தொகை.

இது, 2, 3, 6-வது அடிகள் சிந்தடிகளாக மற்றவை அளவடிகளாயமைந்த இணைக்குறள் ஆசிரியப்பா.

சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம்
எமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாம்
தானிற்கு மன்னே
நரந்தநாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே [ரீஇ
அருங்கலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையு
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பார்வை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றவன்
திருநிறத் தியங்கிய வேலே
அரசர்க் கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப்பாடு நருமில்லை பாடுநருக்கொன்
றீகுநரு மில்லை
பனித்துறைப் பகன்றை நறைகொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பயனே.

—புறநானூறு.

இதனில், குறளடிகளும் சிந்தடிகளும் அளவடிகளும் விரவி வந்திருத்தல் காண்க.

குறிப்பு:—அதியமான் நெடுமானஞ்சிக்கு இரங்கிஔவையார் பாடிய இப்பாட்டு மிகவும் அழகியது. இடங் கவருமென்றஞ்சிப் பொருள்வரையாது விடுகின்றோம். ஆயினும் உரையோடுகூடிய புறநானூற்றுப் பதிப்பின் உதவியால் பொருள் தேர்ந்து கொள்ளலாம். இப்படியே, யாப்பிலக்கணத்திற்கு நாம் உதாரணங்களாய் எடுத்துக்காட்டுஞ் செய்யுள்கள் இலக்கணத்தை விளக்குவதுடன் பெரும்பாலும் சொற்சுவை பொருட்சுவைகள் வாய்ந்தனவாயிருக்கும். சிறிது முயன்று அவைகளின் பொருளையுந் தேர்ந்துகொள்ளல் நலம். தெரியாவிடத்து உரைகொண்ட பதிப்புக்களின் உதவியைத் தேடிக்கொள்ளவும். 'குறுந்தொகை' இக்கலாநிலயம் 3-வது வால்யூமில் உரையுடன் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது.

பறவாய் பறவாய் வியன்பெரு வியவைப்
பறையா வுழுதே கதழும் பறவாய்
பூமலி பொதும்பரில்
சாமளத் தரையினில்
அதடத் தருகினில்
உவதைக் கெதிரினில்
படிகத் தெளிசுனைக் கருணியின் பாங்கர்
குடிஞை குலவிய வறற்சுனை யாதல்
கேகயப் பறவாய்
ஏகிய துண்டேல்
கண்டாய் கொல்லோ யான்பரி யணங்கினைக்
கண்டனை யாயி னறிகுவை மற்றவள்
பகரச் சாயல் பயப்பய நடப்பாள்
மென்விழி மதர்க்கண் தைத்தனு

மறிகுவை யவளெனப் பறவாய்
உரையாய் பறவா பொருசொல் லெனக்கே.

புரூரவன் தபுதாரநிலை-1-வது வால்யூம், பக்கம் 736.

இதுவும் அவ்வாறே குறளடிகளுஞ் சிந்தடிகளும் விரவி வந்தவோர் இணைக்குறளாசிரியப்பா.

ஆசிரியப்பா ஈறு

எவ்வகை ஆசிரியப்பா ஆயினும் அது, ஏ என் ஓ ஈ ஆய் ஐ என்றவற்றி லொன்றினால் முடிதல் வேண்டும் எனக் கூறினோம். எனினும் பெரும்பாலும் பண்டைத் தமிழ்நூல்களிற் காணப்பெறும் அகவற்பாக்கள் ஏகாரம் ஒன்றிலே முடியலாகின்றன. அதுவே நேரிசையாசிரியப்பாக்களுக்குச் சிறப்புமுடைத்து. நாம் காட்டிய உதாரணங்களும் ஏகாரத்தில் முடிந்தவைகளே. என் என்னும் ஈற்றிற்கு மணிமேகலை உதாரணமாயிற்று. கொங்குவேள் பாடிய உதையணன் காதையும் அவ்வாறே. நேரிசை ஆசிரியத்திற்கு ஏ கார ஈறு சிறப்பாவதுபோல் நிலைமண்டில ஆசிரியத்திற்கு என் என்னும் ஈறு சிறப்புடைத் தென்பர். சிலப்பதிகார ஆசிரியப்பாக்கள்.

"கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென"
என்றும்,

"புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென"
என்றும்,

"கோவலன் பண்டை யூழ்வினை யுருத்தென"
என்றும், என என்னும் ஈற்றை உடையவைகளாய் இருக்கின்றன. இப்படியே, மற்ற ஓ ஆய் ஈ ஐ முதலிய எழுத்துக்களாலும் முடிகின்ற ஆசிரியப்பாக்கள் மிகச் சில உள.

பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவ
ளொண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமநிற் றகைகுநர் யாரோ

இந்நேரிசை யாசிரியப்பா, யாரோ என ஓகாரத்தில் முடிந்தது.

குவளை யுண்க ணிவள்வயிற் பிரிந்து
பெருந்தோள் கதுப்பொடு விருப்பினை நீவி
யிரங்குமென் றழுங்கல் வேண்டா
செழுந்தே ரோட்டிய வென்றியொடு சென்றீ

இது, ஈ காரத்தில் முடிந்த நேரிசையாசிரியம்.

நின்றன நின்று தன்றனை யொருசிறைப்
பூந்தண் சிலம்பன் றேந்தழை யிவையெனக்
காட்டவுங் கண்டால் செல்லாள் கோட்டிப்
பூண்முலை நோக்கி யிறைஞ்சி
வாண்முக வெருத்தங் கோட்டினள் மடந்தை.

இது, ஐ காரத்தில் இற்ற நேரிசை யாசிரியம்.

முள்ளி நீடிய முதுநீ ரடைகரைப்
புள்ளிக் கள்வ னாம்ப லறுக்குந்
தண்டுறை யூரன் றனிப்பவு
முண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய்.

இது, ஆய் என்று முடிந்த நேரிசை ஆசிரியம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 5. தைலமாட்டு படலம்.

[673-வது பக்கத் தொடர்ச்சி.]

குணமேனுங் குன்றுபோல்வார்
பொறுமையிற் கடலுமாவார்.

மீண்டிலன் இராமனென்றும் மாண்டனன் மன்னனென்றுங் காண்டலு மயோத்திமக்கள் கருத்தொடு மாவிசோர மீண்டிடு துயரினாலே வருந்திய விதங்களெல்லாம் ஈண்டெடுத் தியம்பாமுன்னம் யாவரும் உணர்ந்துகொள்வார். ஆயினும் யாதினும் முதலதாய் நாட்டின் நலத்தையே கருதும் அந்தணர்களும் மந்திரிகளும்வசிட்டமாமுனிவனைத் தனித்தனியணுகி, அவருக்கு, அரசனில்லா நாட்டின் தன்மையைப் பின் வருமாறு விரிவுற விளக்கினரென்பர் வான்மீகி முனிவர்:—

அரசனில்லாத இராச்சியம் நிச்சயமாய் நாசமடையுமன்றே! அரசனில்லாத நாட்டில், மின்னி முழங்கும் மேகம், நல்லநீரால் மழை பொழியாது. அரசனில்லாத நாட்டில், ஜனங்கள், விதையையெடுத்துத் தூவார்கள். அரசனில்லா நாட்டில், தந்தை சொல்லைப் பிள்ளை கேளான்; கணவன் சொல்லை மனைவி கேளாள். அரசனில்லா நாட்டில், பொருளுமில்லை. அரசனில்லா நாட்டில், மனைவியுமில்லை. முன்னர்க்கூறியவற்றினும் வேறான பெரும் பயமுண்டு; அது என்னவெனில்?—'உண்மையில்லை' என்பதாம். அரசனில்லாத நாட்டில், மனிதர்கள் மகிழ்ந்தவர்களாய்ச் சபைகளைச் செய்யார்கள்; மனத்தைக் கவர்வனவான பூச்தோட்டங்களையும் கோயில்களையும் நிருவிக்கமாட்டார்கள். அரசனில்லாத நாட்டில், யாகஞ்செய்யும் தன்மையுள்ளவர்களும், வேதமோதுபவர்களும் ஐம்பொறியைஅடக்குபவர்களும், கொடிய விரதத்தைப் பூண்டவர்களுமான பிராமணர்கள், 'இடையூறு உண்டாகும்' என்றஅச்சத்தால் பெரியவேள்விகளைச் செய்கின்றதில்லை. முறைப்படிவேள்விபுரியும் செல்வர்களான அந்தணர்கள், பெரியவேள்வியைச் செய்தாலும் 'அதிகாரிகள் தம்மைச் செல்வவானென்று தண்டிப்பார்கள்' என்ற அச்சத்தால் பூரிதக்ஷிணைகளைக் கொடுக்கின்றதில்லை. அரசனில்லா நாட்டில், இராச்சியத்தைச் செழிப்பிப்பவர்களான நடர்களும் நர்த்தகர்களும்நிரம்பிய உற்சவங்களும் தீர்த்தயாத்திரைகளும் வளரா. அரசனில்லாநாட்டில், வழக்குச்செய்பவர்கள் தமதுபயனைப் பெறார்கள்; கதை கேட்பவர்கள், இதிகாசபுராணங்கள் முதலியவைகளைச் சொல்லுபவர்களிடத்துக் கதைகேட்டுச் சந்தோஷப்படார்கள். அரசனில்லாதநாட்டில், ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட இளமங்கையர், கள்வர்பயத்தால் காலையிலும் மாலையிலும் கூட்டங்கூட்டமாய்ப் பூச்தோட்டத்திற்கு விளையாடச் செல்லுகின்றதில்லை. அரசனில்லாதநாட்டில், விரைவாகச்செல்லும் வாகனங்களால், காதல்கொண்டுள்ள மனிதர்கள், தங்கள் மனைவிமார்களுடன் ஆரணியத்திற்குப் போகின்றதில்லை. அரசனில்லாத நாட்டில், பயிரிடுதல், பசுக்காத்தல் இவைகளால் செல்வத்தை யடைந்தவர்கள், நன்றாகப் பாதுகாப்படைந்தவர்களாய் வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு தூங்குகின்றதில்லை. அரசனில்லாத நாட்டில், சிறந்த தந்தங்களை யுடையனவும், அறுபதுபிராய முள்ளனவும், மணி கட்டப் பெற்றனவுமான யானைகள், ராஜமார்க்கத்தில் உலாவுகின்றதில்லை. அரசனில்லாதநாட்டில், அம்பு விடப் பழகும்போது

இடைவிடாது அம்பைப் பொழிபவர்களால் செய்யப்படும் டங்காரம் நிகழ்கின்றதில்லை. அரசனில்லாத நாட்டில், வெகு தூரதேசஞ் செல்லும் வணிகர்கள், அநேகமான விற்கும் பண்டங்களுடன் கூடியவர்களாய், க்ஷேமமாக வழியிற் போகின்றதில்லை. அரசனில்லாதநாட்டில், துணையின்றிச் செல்பவரும் பரமாத்மாவை மனத்தில் எப்பொழுதும் தியானம் பண்ணுபவரும் ஐம்புலன்களையும் அடக்கினவருமான முனிவர், உண்டியிடுபவர் இல்லாதபடியால், எங்குச் சாயங்காலம் வருகிறதோ அங்கு வசிப்பவராக இருப்பதில்லை. அரசனில்லாத நாட்டில், ஒருபொருளைப் பெறுதலும் பெற்றபொருளைக் காத்தலும் முடியாது. அரசனில்லாதநாட்டில், சேனையும் சத்துருக்களைப் போரில் வெல்லாது. அரசனில்லாத நாட்டில், மனிதர்கள், சந்தோஷமடைந்த சிறந்த குதிரைகளாலும் தேர்களாலும் அணியப்பட்டு விரைவாகச் செல்லார்கள். அரசனில்லாத நாட்டில், சாஸ்திரங்களில் தேர்ந்த மானிடர்கள், காடுகளிலும் பூந்தோட்டங்களிலும் சம்பாஷிக்கமாட்டார்கள். அரசனில்லாதநாட்டில், ஜனங்கள் தெய்வங்களைப் பூஜித்த மாலைகளையும் மோதகங்களையும் தக்ஷிணைகளையும் சேர்க்கமாட்டார்கள். அரசனில்லாதநாட்டில், அரசகுமாரர்கள், சந்தனம் அகில் இவைகளைப் பூசிக்கொண்டு, வசந்தகாலத்து மரங்கள்போல விளங்கார்கள். அரசனில்லாதநாடு, நீரில்லாத நதிகள் போலும்; புல்லில்லாத காடுபோலும்; இடையனில்லாத பசுக்கள்போலும். தேரையுணர்த்துவது கொடி; நெருப்பை விளக்குவது புகை; அப்படியே நம்மை விளக்குபவரான மன்னவர், இங்கிருந்து தெய்வத்தன்மையை யடைந்தார். அரசனில்லாதநாட்டில், ஒருவனுக்கும் தனக்கென்று ஒருபொருள் கிடையாது: மனிதர்கள், மீன்கள் போல எப்பொழுதும் ஒருவரையொருவர் விழுங்குகின்றார்கள்; சாதி குலாச்சிரமங்களின் மரியாதையைக் கடப்பதால் ராஜதண்டத்தாற் பீடிக்கப்படும் நாஸ்திகர்கள், 'ராஜதண்டம் நேரும்' என்ற சங்கை யற்றவர்களாய்த் தலையெடுக்கின்றார்கள். பார்வை தேகத்தின் தீமையைக் கடிந்து நன்மையைச்செய்ய எப்பொழுதும் முயற்சி செய்வதுபோல், சத்தியத்துக்குந் தருமத்துக்குங் காரணமான அரசனும், நாட்டின் தீமையைக் கடிந்து நன்மையைச் செய்ய எப்பொழுதும் முயல்கின்றான். அரசன்தான், சத்தியத்தையும் தருமத்தையும் நடத்துவிப்பவன். அரசன்தான், நற்குலத்திற் பிறந்தவருடைய குலாசாரத்தை நடத்துவிப்பவன். அரசன்தான், தாயும் தந்தையும். அரசனே, மனிதர்களுக்கு நன்மையைப் புரிபவன். மன்னவன், நன்னடக்கையை யுடைமையால், யமன் குபேரன் இந்திரன் வருணன் இவர்களினும் மேம்பட்டு நிற்கின்றான். நன்மையையும் தீமையையும் பகுத்தறிவிக்கும் அரசன் இல்லாதிருப்பின், இவ்வுலகம் ஒன்றையும் அறியாது; இருள் மண்டியதாகவே யிருக்கும். கரையை யடைந்து அதைக் கடவாது நிற்கும் சமுத்திரம் போல், அரசர் பிழைத்திருந்த காலத்திலும், தங்களுடையசொல்லை நாங்கள் கடவாமலே யிருந்தோம்; அரசர் இறந்திருக்கையில் கேட்கவேணுமோ? அந்தணத் தலைவரே, நீங்கள் அரசனில்லாமற் கேடடைந்த எங்கள் நடக்கையையும் அரசில்லாமற் கானான நாட்டையும் பார்த்து, இப்பொழுது இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த பிள்ளையும் கொடையாளியுமான ஒரு குமாரனை அரசனாகப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்கக் கடவீர்கள்" என்றார்கள்.

அரசனில்லாமையால் விளையுந் தீங்குகள் இவ்வளவும் நிசமாயிருக்கலாம் எனினும், இத்துணைவிவரமாக இதனை என்வாமதேவர் ஜாபாலி முதலிய அந்தணர்களும் மந்திரிமார்களும் வசிட்டமாமுனிவருக்கு விளக்கினார்களோ விளங்கவில்லை. வசிட்டருக்கு இவைதெரியாமையாலோ, மற்றுத் தமக்குத் தெரிந்ததை எல்லாம் விளம்பிவிடவேண்டு மெனும் விருப்பினாலோ! உரைப்பவனுக்குத் தெரிந்தவைகளை எல்லாம் உரைத்துவிடவேண்டுமென்பது கதைமுறை; கேட்பவன் தெரிந்துகொள்ளவேண்டியதை மட்டும் உரைப்பது நாடகமுறை. வான்மீகர் கதைமுறையில் தன் சரிதத்தை நடத்துபவராதலால் நெடிதுரைத்த இவ்வாசகங்கள் அவர் நூலிற்கு ஏற்றனவாகலாம். மற்றுஇதனை ஒருவரேனும் ஒருங்கேனுங் கூறினாரென்னாது அனைவரும் தனித்தனி கூறினாரென்றது சிறிது உன்னற்பாலது. மன்னவனையும் அவன் மாமகனையும் இழந்ததால் வருந்தியமனம் பேதுற்று அவர் ஒவ்வொருவரும் இயம்புவதும் செய்வதும் நினைந்தாய்ந்து நிகழ்த்த இயல்வதில்லாத தன்மையால், வசிட்டன் அறிந்தவைகளையே வாளா அறைந்துகொண்டிருந்த இயற்கையை ஒரு புறமும், மறுபுறம், இன்னவாறு பன்முறை அவர் பறையினும் சலியாது சினவாது கேட்டிருந்த அவ்வருந்தவ வசிட்டனது பொறுமையின் பெருமையும் சாதிக்கவோ வடநூன் முனிவர் அவ்வண்ணம் இயற்றினர் என்னும் ஐயம் அமையத்தக்கதே.

எவ்வாறாயினும் ஆகுக. வசிட்டனது பொறுமைக் கடலில் அவ்வந்தணர் அமைச்சர்கள்தம் மொழிகள் கரைந்துபோகலாம்; மற்று, அரசனில்லையென்று தன் நூலினும் அப்பெரியோர் அவ்வண்ணமே பேசத் தலைப்பட்டுவிட்டால் பின் என் செய்வது, எப்படி ஆற்றுவது, எவ்வாறு அடக்குவது என்று அஞ்சிய கம்பர், இந்தக் குறைக்கேனும் நினைவிற்கேனும் இடங்கொடாது விலக்குவான் விரைந்தார்போல்,

மீனீர் வேலை முரசியம்ப
விண்ணோ ரேத்த மண்ணிறைஞ்சத்
தூநீ ரொளிவாள் புடையிலங்கச்
சுடர்த்தே ரேறித் தோன்றினான்
வானே புக்கா னரும்புதல்வன்
மக்க ளகன்றார் வருமளவும்
யானே காப்ப னிவ்வுலகை
யென்பான் போல வெறிகதிரோன்

[மீன் நிறைந்த நீருடைய கடல் முரசுபோல் சப்திக்கவும், தேவர் துதிக்கவும், இவ்வுலகத்தவர் வணங்கவும், தூயதன்மைவாய்ந்த ஒளியாகிய வாளாயுதம் தன் பக்கத்தில் விளங்கவும், வீசுங்கிரணங்களையுடைய சூரியன்,—தன்னருமைப் புதல்வனாகிய தயரதன் சுவர்க்கம் சேர்ந்தான், அவன் மக்களும் இப்பொழுது இங்கு இல்லை; ஆதலின் அவர் வருமளவும் நானே இவ்வுலகைக் காப்பேன் என்பான்போல,—ஒளியுடைய தன் தேரில் ஏறி உதயமானான்]

என்று, வான்மீகத்தில் விளைந்ததுபோன்றதோர் சொற்பொழிவு இங்கும் வாரா முன்னம் காத்துவிடுகின்றார்.

அரசியலைப்பற்றிக் கம்பரது கோசலங் கொண்டிருந்த கருத்திற் கியைந்தது இது. அரசனென்பான், தண்டநீதியைச் செலுத்தி ஆள்பவனுமல்லன்; மற்று, மக்கள்காண யாதும் இயற்றுபவனும் அல்லன். தயரதனைப்போன் றொருவன் தலைவனாய் இருத்தலே சாலும். இவ்வகையில், கதிரோனும் அவன் குலத்துதித்த வேந்தரும் ஒரேமுறை யொழுக்கத்தைப் பின்பற்றுபவராகின்றார். இம்மன்னர்குல மரபெலாம் இனிதுணர்ந்த கோசிகன், ஜனகவேந்தன்பால்,

துனியின்றி யுயிர்செல்லச்
சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப்
பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான்
தருமத்தின் கலசத்தான்
மனுவென்ற நீதியான்...

[திருமாலின் பிரகாசம்பொருந்திய சக்ராயுதம்போன்ற சூரியன் தோன்றியவுடன் பனியைத் தொலைப்பதுபோல், பகையைச் செயித்து, உயிர்கள் யாவும் வருந்தாமல் தம் வாழ்நாள் கழிக்கும்வண்ணம் பூமியைக் காப்பவனும் தன் உடலன்றி (அல்லது வில்லன்றி) வேறொரு உதவியில்லாதவனும், தருமத்தையே கவசமாக உடையவனும், மனுவையேபோல் நீதி உடையவனும் ஆகிய தயரதன்...]

என்று தயரதனை அறிமுகம் செய்துவைத்த செவ்விய வாசகம் சிந்திப்போர் சிந்தையெல்லாம் நிறையுமோர் நீர்மை வாய்ந்தது. இயற்றியும் பெரியராகார் பலர், சிலர் இருத்தலே பெருமையாகும். பரிதியும் அவன்குலப் பார்த்திபர்களும் பின்னினத்தவர். அன்னவர் தம் அமைச்சரும் உழைபரும்தாம் இழந்த வேந்தற் கிரங்குவாரல்லது வேறொரு வேந்தனுக்கு விரையமாட்டார். தயரதனைப் பிரிதற்காற்றாது கரைந்தனர் கம்பர்பால் பயின்றவர்; வான்மீகரின் வழிவந்தோர் மன்னனென்பான் ஒருவன் வேண்டுமே என்ற விதனங் கொண்டனர்!

தனிப்பாடல்கள்

முருகன்.

1. அன்றே யுயிர்க்குயி ராயினனை
யென்று மருளிறையுந்
தின்று தளிக்கும் பெருமானை
ஞானக் குருமணியை
வென்றார் தலையி லடிமலர்
சூட்டி விளிவிலின்பம்
நன்றே சுரக்கும் முருகப்
பிரானை நயக்குதுமே.

2. தாயாகித் தந்தையு மாய்த்தழைத்
தின்னு முயிர்தழைக்கச்
சேயா கியுமருள் செய்யும்
முருகன் திருவடிக்கே
ஓயாத வன்புசெய் யுத்தமர்
சேவடி யொட்டியமன்
நாயா கியவெம் பிறவி
கெடுக்கின்ற நன்மருந்தே.

3. சிவமுரு காசெந்தி வேன்முரு
காசிந்தை செய்யச் செயந்
தவமுரு காதமிழ் நான்முரு
காதணி காசலத்துள
பவமுரு காகதி ரைப்பதி
மேவிப் பயனளிக்கும்
நவமுரு காவெனக் குன்னை
விடவில்லை நற்றுணையே.

4. துணையுந் தொழுந்தெய் வமுந்துணை
யாய்நிற்குந் தோழனுமெல்
லணையி லணைந்தின் பருளு
மவளு மடிபரவு
மிணையிலன் புள்ளநன் மக்களுந்
துக்கக் கடல் கடக்கும்
புணையுமுள் ளத்துப் பொருளும்
முருகன்றன் பொன்னடியே.

5. பொன்னடி யேபொரு ளாவது
தேவர்கள் போற்றிசெய்யும்
பொன்னடி யேயொளி யாவது
கண்டவர் பூண்டுகொள்ளும்
பொன்னடி யேயுற வாவதெஞ்
ஞான்றும் பொருவிலின்பம்
பொன்னடி யேபுக லாவதென்
றோதும் மறைப்பொருளே.

6. பாதங் கடந்தெனை யாண்ட
குருமணி பார்முதலா
நாதங் கடந்த துரியசிந்
தாமணி நம்புமருட்
போதங் கடந்தென் மலவிருள்
போக்கிய புண்ணியனை
ஏதங் கடந்தின்ப யேவவெஞ்
ஞான்று மிறைஞ்சுதுமே.

நவாலி. க. சோமசுந்தரம் பிள்ளை!

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்டெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.
யுனைடெட் ஸோல் ஏஜண்ட் கன்ஸர்ன், மதருஸ்.
டிப்போ: பம்பாய். கல்கத்தா.
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட்
பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

.. 1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும்
லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலீஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பேனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பேனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்

விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள்நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

திரு அருட்பா

வசனப்பகுதி

ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்

அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணாவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணாவும், ஆக, 5 அணா தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய வற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய் மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32.

மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	8	0	பையிண்டு செய்யாதது	10	0	0
காலிகோ கில்ட்	10	0	0	காலிகோ கில்ட்	11	8	0
ஆப்லெதர் கில்ட்	10	8	0	ஆப்லெதர் கில்ட்	12	0	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

சென்னையிலுள்ள கதர் வஸ்திராலயத்தில் ஆகஸ்டு மாதத்தில் மாத்திரம் 14 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கதர் விற்பனையா யிருக்கின்றது என்று தெரிகின்றது.

***

கோழி கூவுவதேன்:—பாரிஸ் நகரத்து ஆப்ஸர் வேட்டரி டைரக்டர் புரொபஸர் பிகோர்ட் பிரஞ்சு என்பார், விக்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளர் கூட்டமொன்றில் 'நள்ளிரவில் கோழிகூவுவதேன்' என்னும் விஷயம் பற்றிப் பேசியதாவது:—ஒரு நாள் இரவு எனக்குச் சரியான தூக்கம் இல்லை. இரவு 12 மணி வேளையில் கோழியொன்று கூவியது. உடனே விழித்துக் கொண்டிருந்த நான் படுக்கையிலிருந்து எழுந்து மணியைப் பார்த்தேன். அந்த நேரத்தை எனது குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டேன். பிறகு சிந்தனையில் ஆழ்ந்தேன். "கோழி எப்பொழுதும் விடியற்காலையிற்றானே கூவும், நடு இரவில் இன்று அது கூவியதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும்" என்று முடிவு கட்டிக்கொண்டேன். இந்த முடிவையும் எனது குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டேன். கோழிகூவிய சமயத்தில் சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. சந்திர வெளிச்சத்தைப் பார்த்துப் பொழுதுவிடிந்துவிட்டது என்று கருதிக் கூவியதா அல்லது சந்திரன் ஒளியினால் அக்கோழிக்கு உள்ளக்கிளர்ச்சி ஏற்பட அதனால் கூவிற்றா? என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. அதுமுதல் நான் இவ்விஷயத்தை ஆய்ந்து வருகின்றேன். எனினும் இன்னும் நான் ஒரு முடிவிற்கும் வரவில்லை. சாஸ்திர ஆராய்ச்சியாளரான உங்கள்முன் இவ்விஷயத்தைக் குறித்துரைத்தேன். நீங்கள் ஆராய்ந்து ஒருமுடிவுசெய்வீர்களாக". இப்பிரசங்கத்திற்குப் பிறகு சாஸ்திர ஆராய்ச்சியாளர் இவ்விஷயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

***

காந்தியடிகளின் செய்தி:—காந்தியடிகள் கப்பலேறுமுன் இந்தியருக்கென விடுத்த செய்தி வருமாறு:—இப்பொழுது நான் இரண்டா முறையாக ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளேன். ரவுண்டேபில் மஹாநாட்டிற்கு என்னைக் காங்கிரஸ் பிரதிநிதியாகத் தேர்ந்ததிலிருந்து இந்திய மக்கள் என்னிடம் கொண்டுள்ள நம்பிக்கை புலனாகின்றது. ஜனங்களுக்கு என்னிடம் இவ்வளவு நம்பிக்கை யில்லையெனில் நான் ஒரு பொழுதும் லண்டன் செல்லச் சம்மதித்திருக்கமாட்டேன். ஜனங்கள் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையால் உண்டாகும் ஊக்கத்துடன் காங்கிரஸ்இட்ட பணியேற்று நான் லண்டனிற்குப் பிரயாணமாகின்றேன்.

நானும் மனிதன்; ஆதலால் குறையொன்றுமில்லா நிறைவுடையவனாய் நான் இருப்பது இயலாது. என் குறை எனக்குத் தெரியும். குறையுடையவனாயினும் சத்தியத்தையும் அஹிம்சையையும் அடிப்படையாகக்கொண்டு காரியங்களைச் செய்வேன்.

நான் நொந்தும் ஒடிந்தும்போன மனிதன். எனது தேசமக்களும் ஒடிந்தும் நொந்தும் இருப்பவர்களாவர். நொந்தும் ஒடிந்தும் போயுள்ள மக்களின் பிரதிநிதியாக நொந்தும் ஒடிந்தும் போன ஒருவன் போவதே பொருத்தமுடையதாகும். என் நிலையில் இருப்பவரே ஏழைமக்களின் மனநிலையையும் அவர் கஷ்டங்களையும் அறியவியலும்.

காங்கிரஸ் எனக்கு இட்டுள்ள பணியை, அதன் விருப்பத்திற்கு விரோதமா யிராதபடி ஆற்றுவேன். என்மீது ஜனங்கள் வைத்துள நம்பிக்கை ஒருசிறிதும் பழுதுறாது. இந்தியமக்கள் நன்மைக்காகக் காரியம் செய்வேனேயாயினும், ஆங்கிலேயர் மனம் வருந்தும்படி ஒன்றும் செய்யமாட்டேன். அஹிம்சையை எனது காரியங்களுக்கெல்லாம் அடிப்படையாகக் கொண்டுள்ள நான் யார் வருந்தும்படியும் செய்வது தவறு. இந்திய மஹாஜனங்களை நான் ஒருபொழுதும் வஞ்சிக்கமாட்டேன். அப்படி நான் வஞ்சனை புரிவேனேயானால் என்னை நீங்கள் கொன்றுவிடுவதும் ஹிம்சையாகாது. ஆங்கிலேயர் எனக்குப் பகைவர் அல்லர். மகமதியர்கள்மீது நான் பகைகொள்ளமாட்டேன். இவ்வுலகத்தில் எவரும் எனக்குப் பகைவர் அல்லர். எல்லோரும் உடன் பிறந்தோரே.

***

நமது கடமை :—இந்தியாவில் இனி ஏற்படவேண்டி யிருக்கும் திருத்தத்தைப்பற்றி டாக்டர் பெஸண்டு அம்மையார் 'நியூ இந்தியா' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கம் வருமாறு :—

"கிழக்கு இந்தியாக் கம்பனியார் இந்தியாவில் செலுத்திய வியாபார ஆட்சி இந்நாட்டை வறுமையில் ஆழ்த்தியது. அறிவும் குன்றியது. 1813-ம் ஆண்டு வரையில் இந்திய கிராமங்களில் ஒரு குக்கிராமத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் பள்ளிக்கூடங்கள் இருந்தனவென்று யாத்திரைகாரர்களின் அறிக்கையினால் தெரியவருகின்றது. 1813-ம் வருஷம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குக் கிழக்குஇந்தியாக் கம்பனியார் அனுப்பிய அறிக்கையிலும் காணப்படுகின்றது. கம்பனியார் இந்தியாவைக் கைவசப்படுத்துமுன் இந்தியா கடவுள்அறிவில் சிறந்த நாடாகவும், கல்வி நிறைந்த நாடாகவும், பிறநாட்டு மக்களால் மிகமதிக்கப்பட்டும் இருந்தது. ஜனங்கள், வண்மையால் செறிந்த மனமுடையவர். ஆதலால் எல்லோரும் எங்கும் அமைதியும் அன்புமே வாழ்வெனக்கொண்டு வாழ்ந்தனர். வேண்டி யெய்துவது கடவுளன்றி வேறொன்று மிலாததால், அவர் விரும்பி முயல்வதற்கு வேறு ஒரு பொருளில்லை. எனவே குறையில்லை, அல்லலுமில்லை. நிறைந்த சந்தோஷமுடையவர்களாய்க் கடவுளொடு இழைந்து வாழ்ந்தனர். கம்பனியின் ஆளுகையும், ஆங்கில வியாபார நாகரிகமும் நுழையக் கடவுள் அறிவும், அதற்குத்துணையாயிருந்த கல்வி அறிவும் குன்றலாயின. இப்பொழுது இந்தியர் கடவுள் ஒன்று உண்டோ என்றுஐயம் கொள்ளவும்தலைப்பட்டிருக்கின்றனர். இனி நாம் செய்யும் திருத்தமுயற்சியில், இந்தியா அப்பெரும் பண்டைப்பேற்றை எய்தும்படி செய்வதே நல்லோர் கடனாகவேண்டும். அன்னதற்குக் கடவுள் அறிவை இளையவர் மனதில் ஊன்றவைக்கும் கல்விமுறை யொன்றைத் திட்டம்செய்து அம்முறையினதான ஆரம்பக் கல்விச்சாலைகள் எங்கும் ஏற்படவேண்டும். அக்கல்விச்சாலைகளில் அயல்நாட்டு மொழிப்பயிற்சி செய்துவித்தல்கூடாது. இதுதான் முத[illegible] முக்கியமுமான [illegible]வேலை. இவ்வேலை கைகூடின் [illegible]

188933

KALANILAYAM.
REG. NO., M 2324.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனும்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரகேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விசுவநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

- சோப்புகளில் ராஜா -

நாடறிந்தது நல்வரவேற்கப்படுவது

: சிலாக்கியமானது :

டாக்டர் டிராலியின்

- லயன் சோப் -

பார்வைக்கு உன்னதமும், உயர்தரமும் ஆனது. அதேபோல் உழைப்பிலும் மேலான குணம் நிறைந்தது.

ஒரு கட்டியாவது இரு கட்டியுள்ள பெட்டியாவது வாங்குக.

- - எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் - -

Sole Agent :—

A. V. R. A. ADYCAPPA CHETTY,
52, Bunder Street, Madras.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணா 8.

சுகுணவதி அல்லது **ம**ணம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆப்டோன் படங்கள், உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.

விலாசம் :—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக்கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. F. Kumariah, B.A., B.L., (Editor)